
Sales Reps. Welcome
Raja M. Mahendran, P. Eng.
(Broker / Owner)
For All your Real Estate & Investments Needs!
HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd. Suite #206, Toronto
145 Traders Blvd # 28, Mississauga
416.321.6969 / 905.712.2666

16 வது வருடத்தில்
# விளம்பரம்
VLAMBARAM™
416-282-8059 E-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com 416-282-4978

வாய், பல் சம்பந்தமான வைத்திய சேவைகளுக்கு
WALK IN DENTAL CLINIC
Dr. Iru Vijayanathan
குடும்ப பல்வைத்தியர்
OPEN 7 DAYS
416-264-3232
3150 Eglinton Ave. E.
Markham & Eglinton சந்திப்புக்கு அருகாமையில்

நதி 16 | பாலம் 10 | சமூக முன்னேற்றப் பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MAY 15, 2006



அர்த்தமற்ற "சும்மா" 08



தவறான முன்னுரிமை 13



பாதைகள் பயணங்கள் 15

# கண்காணிப்புக் குழுவிற்கு எச்சரிக்கை

"இலங்கையில் போர்நிறுத்த ஒப்பந்தம் காகிதத்தில் மட்டுமே காப்பாற்றப்படுகின்றது. ஆனால் உண்மையில் இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் ஒரு போர் நடந்து கொண்டிருக்கின்றது" என போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் உலப் ஹென்றிக்சன் ரொய்ட்டர் செய்தி நிறுவனத்திடம் தெரிவித்துள்ளார்.

மேலும் அவர் கருத்துக் கூறும் போது வெற்றிலைக்கேணியில் கடற்படைமீது புலிகள் நடத்திய தாக்குதல் அப்பட்டமான ஒரு யுத்தநிறுத்த மீறலே என்றும் தெரிவித்துள்ளார். அத்தோடு இலங்கைத் தமிழ் மக்கள் மீதான படுகொலை சம்பவங்களுக்கு இலங்கை படையினர் காரணம் என்றும் இவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

நிலைமை இவ்வாறு இருக்க இலங்கை கடற்படையினருடன் பயணம் செய்ய வேண்டாம் என்று யுத்த நிறுத்த கண்காணிப் குழுவினரை புலிகள் கடிதமூலம் எச்சரித்துள்ளனர். இது இறுதி எச்சரிக்கை என்று அக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதனை அடுத்து தனது கடற்பிராந்திய கண்காணிப்புப் பணியை தற்காலிகமாக இடை நிறுத்தி வைத்துள்ளதாக கண்காணிப்புக் குழு திடீரென அறிவித்துள்ளது.

# மீண்டும் முதல்வரானார் மு. கருணாநிதி

தமிழக முதல்வராக திமுக தலைவர் மு. கருணாநிதி பதவியேற்றுக் கொண்டார். அவருடன் முப்பது அமைச்சர்களும் பதவி ஏற்றுக் கொண்டனர்.

மு.க. ஸ்டாலின் முக்கிய அமைச்சுப் பொறுப்பு ஒன்றை ஏற்றுக் கொண்டுள்ளார். ஊரக வளர்ச்சி, உள்ளாட்சி நிர்வாகம் இவருடைய கைகளுக்குள் வந்துள்ளது. ஆட்சிப் பொறுப்பை ஏற்றதுமே, குடும்ப அட்டைக்கு அரிசி கிலோ இரண்டு ரூபாய்க்கு வழங்கப்படும் சட்டத்திலும், விவசாயிகளின் கடன்களை முற்றாக தள்ளுபடி செய்யும் சட்டத்திலும் கருணாநிதி கையெழுத்திட்டு தனது தேர்தல் வாக்குறுதியை நிறைவேற்றினார்.

பெரும்பான்மை இல்லாத இந்த திமுக ஆட்சி எவ்வளவு காலம் நீடிக்கும் என்பது கூட்டணிக் கட்சிகளின் தயவிலேயே தங்கியுள்ளது. இதே சமயம் இந்தத் தேர்தலின் பின்னர் நடிகர் விஜயகாந் ஒரு தனிப்பெரும் சக்தியாக உருவெடுத்துள்ளார். அவருடன் கூட்டணி இல்லாமல் எதிர்காலத்தில் யாருமே வெற்றிபெற முடியாது என்ற நிலைமை உருவாகியுள்ளது என்று அரசியல் விமர்சகர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

திமுக வின் தலைமையிலான கூட்டணி மொத்தம் 234 தொகுதிகளில் 172 இடங்களில் வெற்றி பெற்று ஆட்சியைக் கைப்பறியுள்ளது. 13-ம் தேதி அன்று மு. கருணாநிதி முதலமைச்சராக 5ஆவது தடவையாக பதவி ஏற்றார். இவ்வாட்சி முதல் தடவையாக ஒரு கூட்டணி அரசாக இருக்கும். திமுக தனித்தே ஆட்சி அமைக்க குறைந்தது 118 இடங்களில் வெற்றி பெற்று இருக்கவேண்டும். திமுக வுக்கு இத்தேர்தலில் 103 இடங்கள் கிடைத்துள்ளன.

கூட்டணியில் நாங்களும் சேர்ந்தே உள்ளதால், காங்கிரசுக்கு பங்கு வேண்டும் என்று முன்னர் காங்கிரசின் தலைவர்களில் ஒருவரான ஈ.வி.கே.எஸ் இளங்கோவன்



சொன்னதற்கு, தன் கடும் எதிர்ப்பை சோனியா காந்தியிடம் கருணாநிதி தெரிவிக்க, கடைசியில் இளங்கோவன் கருணாநிதியின் வீடு சென்று மன்னிப்பு கேட்க வேண்டிவந்தது.

*தொடர்ச்சி 02ஆம் பக்கம்*

சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm, மாலை 5pm - 9pm
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்.
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416 - 754 - 7338 / 416 -724 -7480
3011 Markham Road , Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarboro.

HOLMAN
Insurance Brokers LTD.
Balan Kanapathipillai, R.I.B. (ON)
Associate Broker



• Auto • Commercial • RESP
• Home • Life • RRSP
416.321.1515 • 416.452.6975
4433 Sheppard Ave. E. Suite 200, (Brimley/Sheppard)

Singapore Communication
Since 1991
$40/350 min + Unlimited incoming local calling
$50/500 min + Unlimited incoming local calling
$75/750 min + Unlimited incoming local calling
**Option E & W calling , Free phone $20, $30 Packages also available
For More Info Please Visit to the Store
*** Offer Ends Without Notice***
More Info. Call: 416-740-5292
5010 Steeles Ave. W., Unit 17 ABC
(Kipling & Steeles)

துரித பணமாற்றுச் சேவை
வவுனியா - கொழும்புச் சுற்றுப் புறங்களுக்கும் - சிங்கப்பூர் - சென்னை ஆகிய இடங்களுக்கும் கடுகதியில் பணம் அனுப்புவதற்கு
மு. காசிப்பிள்ளை & சன்ஸ்
416.267.8221

"Making Dreams Reality"



HomeLife GTA Realty Inc.
Ravi R. Raveendran BSc.(Eng)
Sales Representative
416-817-8479
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER



RAJ
A. Rasaratnam
B.Com(Hons) - Sales Rep
416-726-8055
HomeLife/GTA Realty Inc.
Bus: 416-321-6969
1711 McCowan Rd.
Suite #206
Scarborough, ON.
M1S 3Y3

THINKING OF BUYING / SELLING



HomeLife GTA Realty Inc.
Jeyanthi Sritharan
Sales Representative
416-918-5872
Bus: 416-321-6969
1711 McCowan Rd. Suite #206, Toronto
INDEPENDENTLY OWNED AND OPERATED, BROKER

வீடு வாங்க, விற்க...
ரவி பரமு
வீட்டுப் பிரதிநிதி



DIRECT: 416.262.4176
OFFICE: 416.321.6969
HomeLife GTA Realty Inc.
1711 McCowan Rd.
Suite #206, Toronto

# தமிழக தேர்தல் காட்சிகள்

01 ஆம் பக்கத் தொடர்ச்சி

48 தொகுதிகளில் போட்டியிட்ட காங்கிரஸ் 35 தொகுதிகளில் வெற்றி பெற்று கருணாநிதியிடம் பேரம் பேசும் அளவுக்கு பலமடைந்துள்ளனர். எனக்கு பதவி வேண்டாம் என்று நேற்று வரை சொன்ன ராமதாஸ் இப்போது என்ன பேரத்திற்கு தயாராவார் என்பது தெரியாது.

இதே பலம் வாய்ந்த திமுக கூட்டணி கடந்த நாடாளுமன்ற தேர்தலில், 39 இடங்களிலும் வெற்றி பெற்று, ஜெயலலிதாவை பயங்கர தோல்வியடையச் செய்தனர். அதே கூட்டணி, இன்று 60 சட்டமன்ற இடங்களில் அதிமுகவின் பலமற்ற கூட்டணியிடம் தோற்றுள்ளது. அதிமுக தனித்து 53 இடங்களிலும், திமுக 103 இடங்களிலும் வெற்றி பெற்றுள்ளன. அனேக இடங்களில் அதிமுக சொற்ப வாக்கு வித்தியாசத்தில் தான் தோல்வி அடைந்துள்ளது.

திமுக வின் வெற்றிக்கு, அதன் பலத்த 7 கட்சிக் கூட்டணி, ஒரு பகாசுர ஏகபோக தொலைக்காட்சியின் ஆக்கிரமிப்பு, திமுகவிடமிருந்து பெருக்கெடுத்த பணவெள்ளம், எல்லை கடந்த பிரச்சாரம், கலர் டிவி போன்ற இலவசங்களின் கவர்ச்சி இவற்றைக் காரணமாகச் சொல்ல வேண்டும்.

## வெங்கட் சாமிநாதன்

எனது ஜனநாயகக் கடமையை ஆற்றியாயிற்று. நான் தில்லி விட்டு சென்னை வந்தது டிசம்பர் மாதம், 1999-ம் வருடம். வந்ததிலிருந்து எனது ரேசன் கார்டுக்கும், வாக்காளர் பட்டியலில் என் குடும்பத்தார் பெயர்களைச் சேர்ப்பதற்கும் செய்த முயற்சிகள் அனைத்தும் வீணாயின. மூன்று தேர்தல்கள் வந்து போயின. எதிலும் நான் வாக்களிக்க முடியவில்லை. அலுத்து வெறுத்துப் போய் இருந்த நிலையில் இம்முறை வாக்காளர் பட்டியலில் எங்கள் பெயரும் காணப்பட்டது. நான் இருப்பது 5-வது வார்டில். என் தெருவில் உள்ள அனைத்தினரின் பெயர்களும் வாக்காளர் பட்டியலிலும், எனது பரிச்சய அட்டையிலும் குறிப்பிடப்பட்டிருப்பது 1-வது வார்டில் என்பது வேறுவிடயம். என்னைச் சுற்றியிருக்கும் அனுபவம் செறிந்த தமிழக வாழ் அண்டை அயலார்களால் அதைத் திருத்தப் போனால், உள்ளதும் போகும் என்று எனக்கு புத்திமதி கூறப்பட்டது.

எனது வாக்கைப் பதிவு செய்து வந்தாயிற்று. 11-ம் தேதி முடிவுகள் வெளியாகும். இரு தரப்பினரும் தங்களுக்கு பெரும்பான்மை வெற்றி நிச்சயம் என்றே சொல்லிக் கொள்கிறார்கள். அரசு ஜெயலலிதா வினதாதல்லால், எந்த உதவியும் தமிழகத்திற்கு வந்து விடக்கூடாது என்பதில் மிகக் கவனமாக இருந்துள்ளார் கருணாநிதி. பைக்காரா மின்சார விரிவாக்கத்திற்கு சுற்றுச் சூழல் பாதகம் என்று தடை சொல்லப்பட்டது. கடைசியில் தில்லி உச்ச நீதி மன்றம் சென்று அத்தடை நீக்கப்பட்டது. கடல் நீரைக் குடி நீராக்கும் திட்டமும் சுற்றுச் சூழல் தடை சொல்லி நிறுத்தப்பட்டுள்ளது. கருணாநிதி கேட்டுப் பெற்ற மத்திய அமைச்சுப் பதவிகள் எல்லாம், தன் சன் டிவியின் அசுரப் பெருக்கத்திற்கு உதவுவனவாகவும், ஜெய லலிதாவை தனிப்பட்ட முறையிலும், அரசின் தலைமையாகவும் முடக்கி இம்சைப்படுத்த உதவும் இலாக்காக்களாகவுமாகவே இருந்தன. நிதி, நீதி, சுற்றுச் சூழல், தொலைத்தொடர்பு, கடல், தரைப் போக்குவரத்து.

அடுத்ததாக கருணாநிதிக்கு பிரம்மாஸ்திரமாக உதவுவது, சன் டிவி என்னும் கடந்த 10 வருடங்களாக பகாசுர அவதாரம் தரப்பட்டிருக்கும் தொலைக் காட்சி சாதனம். கருணாநிதியின் இரு பேரப்பிள்ளைகளின் கையில் உள்ள ஆயுதம். அதன் வீச்சும் பரப்பும் இவ்வுலகில் தமிழ் இருக்குமிடமெல்லாம் ஆக்கிரமம் கொண்டது. அதன் இருப்பு சினேக பூர்வமான இருப்பல்ல. ஆக்கிரமிப்பின் இருப்பு. அதைப்போலவே ஒரு தனிப்பட்ட கட்சியின் சாதனமாக உள்ள ஜெயா டிவி யை விட ஏழு மடங்கு அதிக வீச்சும் உக்கிரமும் (its spread and intensity) கொண்டது. இந்த ஆயுதத்தை தி.மு.க பிரச்சார ஆயுதமாகவே பயன்படுத்தி வருகிறது.

**திமுக கூட்டணி 163**

திமுக - 93
காங்கிரஸ் - 35
பாமக - 19
இந்தியக் கம்யுமீஸ்ட் - 6
மாக்ஸ்ட் கம்யுமீஸ்ட் - 9
முஸ்லீம் லீக் - 1

**அதிமுக கூட்டணி - 69**

அதிமுக - 60
மதிமுக - 6
விடுதலைச் சிறுத்தைகள் - 2
அய்அன்ரியூசி - 1

**விஜயகாந் - 1**
**சுயேட்சை _ 1**

அரசு பற்றிய எந்த நல்ல தகவலும் சன் டிவி யில் இருட்டடிக்கப்பட்டு விடும். திமுக பிரச்சாரத்திற்கேற்ப செய்திகள் உருவாக்கப்பட்டு அது திரும்பத் திரும்ப பரப்பப்படும். தொலைக் காட்சி வசதி உள்ளோரில் 75 சதவீதம் சன் டிவி தரும் தகவலைத் தவிர வேறு அறிய மாட்டார்கள். உதாரணமாக, திமுக தூண்டிவிட்ட கடையடைப்பு தோல்வியடைந்திருக்கும். இருப்பினும் காலை 6 மணிக்கு கடைகள் திறந்திராததை படமெடுத்து செய்தி பரப்பப்படும். அதேபோல பஸ் ஸ்டிரைக். ஜெயா டிவியில் பஸ்கள் ஓடிக்கொண்டிருக்கும் சாலைகளைக் காண்பிப்பார்கள். ஸ்டிரைக் படுதோல்வி என்று ஜெயா டிவி சொல்லும்.

திமுக விலிருந்து பிரிந்து வந்த வை.கோ, சரத் குமார், போன்றோர் கருணாநிதி மீதும், மாறன் சகோதரர்கள் செய்யும் அராஜக, ஆதிக்கவெறி பிடித்த செயல்கள், நய வஞ்சக காரியங்கள் அத்தனையும் தம் பிரச்சார மேடைகளில் கொட்டிக் கொண்டிருந்தனர்.

உங்கள் DTH நிறுவனத்தின் 33 வீதப் பங்குகளை, எங்களுக்கு face value அதாவது பங்கு ஒன்றுக்கு 10 ரூபாய் கணக்கில் கொடுக்காவிட்டால் டாடா நிறுவனத்தை ஒழித்துக் கட்டிவிடுவேன் என்று தயாநிதி மாறன் மிரட்டியது, ராஜ் டிவி யை மிரட்டியது, சன் டிவிக்கு சாடிலைட் மூலம் உடனுக்குடன் செய்தி பரப்பும் வசதிக்கு அனுமதி அளித்தது, ஜெயா டிவிக்கு newsservice channel தொடங்க 2 வருடங்களாக அனுமதி தராமலிருப்பது, 1994-ல் வெறும் 4 லட்ச ரூபாய் முதலீட்டில் தொடங்கப் பட்ட சன் டிவி-க்கு இப்போது 17 டிவி சானல்கள், 6000 கோடி ரூபாய் சொத்து என்று 12 வருடங்களில் வளர்ந்தது எப்படி? உலகில் எந்த நிறுவனம் 4 லட்சத்தை 6000 கோடியாக பெருக்கியது? என்று அடுக்கடுக்கான கேள்விகளை வைகோ கிளப்பி வருகிறார். இவை எதற்கும் இதுகாறும் பதில் இல்லை. பதில் சொல்லப்படாத இக்கேள்விகள் எதுவும் சன் டிவி பார்வையாளருக்கு தெரியாது.

இதுவரை திமுக விடமிருந்து. தமிழகம் முழுதும் தொலைக்காட்சிப் பெட்டிகளுக்கு இணைப்பு தந்து வாடகை வசூலிக்கும் Cable network சன் டிவியின் சுமங்கலி கேபிள்ஸ் கிளை நிறுவனம் வசம் உள்ளது. கடந்த பத்து வருடங்களுக்குள் இந்த ஏகபோக வசதியை சன் டிவி கைப்பற்றியது, சாம பேத தான தண்டம் ஆகிய எல்லா உத்திகளையும் கையாண்டல்ல, பெருமளவு தண்டம், பின் பேதம், இவையே போதுமானதாக இருந்தது. இப்போது இவ்வசதி வருடத்திற்கு 264 கோடி ரூபாய் வருமானம் அளிப்பதாக உள்ளது. அதோடு, தனக்கு பிடிக்காத சானல்கள், தனியார் டிவிக்கள், நிகழ்ச்சிகளை இருட்டடிப்பு செய்யவும் பேருதவியாக இருக்கிறது. விண் டிவியின் ஒளி பரப்புகள் இருட்டடிப்பு செய்யப்பட்டன. ராஜ் டிவியின் செய்தி நிகழ்ச்சிகள் மிரட்டல்களுக்கு உள்ளாகின்றன.

இந்த cable network-ஐ அரசுடமையாக்கி, குறைந்த வாடகையில், யாரும் எந்த சானலையும் பார்க்கலாம் என்ற சட்டம் தமிழக சட்டமன்றத்தின் ஏற்போடு கொண்டு வரப்பட்டதும், அன்றே, கருணாநிதி தம் கூட்டணிக் கட்சியாருடன் கவர்னர் மாளிகை சென்று அதற்கு அவர் ஒப்புதல் கொடுக்கக் கூடாது என்று சொன்னார். கருணாநிதியின் சிபாரிசில் தமிழக கவர்னர் ஆனவர் பர்னாலா. இது நாள் வரை அச்சட்டம் கையெழுத்தாகவில்லை. இது போன்று கருணாநிதி தன் செல்வாக்கையும் அணிபலத்தையும் காட்டியது இன்னும் ஒரே ஒரு முறைதான். அது, மத்திய அரசில் சேரும் முன் தனக்கு இத்தனை மந்திரி பதவிகள், இன்னின்ன இலாக்காக்கள் வேண்டும் என்று நிர்பந்தித்தபோது தான். இந்த செல்வாக்கை அவர், வெள்ள நிவாரண நிதி பெறவோ, சுனாமி நிவாரணத்திற்கோ, கடல் நீரை குடி நீராக்கும் திட்டத்திற்கோ, பைகார மின்சார விரிவாக்கத்திற்கோ, காவிரி நீர் பிரச்சினைக்கோ, கேரள அரசு சுப்ரீம் கோர்ட் தீர்ப்பையும் மீறி, முல்லையாற்று நீர்த்தேக்கத்தை முன்னளவு உயர்த்த மறுப்பதை எதிர்க்கவோ பயன்படுத்த வில்லை. மாறாக, ஜெயலலிதா அரசில் இருக்கும் வரை, தமிழ் நாடும் மக்களும் என்ன அவதிப்பட்டாலும் பரவாயில்லை, எதுவும் நல்லது நடந்து அது ஜெயலலிதாவிற்கு சாதகமாகிவிடக்கூடாது என்பதில் மிக முனைப்பாக இருந்தவர்.

தேர்தல் பிரசாரங்கள் ஏப்ரல் மாதம் தொடங்கின. ஜெயலலிதா 31 நாட்கள், தமிழகம் முழுதும் பிரசாரம் செய்துள்ளார். அவர் தன் சாதனைகளைச் சொல்கிறார். அவர் தொடங்கிய ஒரு வாரம் பின்பு கருணாநிதி, தன் தேர்தல் அறிக்கையில் என்னென்ன இலவசமாகத் தருவேன் என்ற பட்டியலுடன் பிரசாரம் செய்கிறார். கலர் டிவி, 2 ரூபாய்க்கு அரிசி, என்று அப்பட்டியல் இலவசங்களின் பட்டியலாக அவதாரம் எடுத்துள்ளது. கலர் டிவி இலவசம் அரிசி 9 ரூபாய்க்கு வாங்கி இரண்டு ரூபாய்க்கு விற்கும் என்று பட்டியல் தொடங்குமானால், அது கேலிக்குரிய ஒன்று. ஆனால், அது தமிழ் நாட்டில் பெரும் தாக்கத்தை உருவாக்குவதாகத் தோன்றவே, இதற்கு பதில் கொடுத்தாக வேண்டும் என்ற அரசியல், தேர்தல் நெருக்கடியில், ஜெயலலிதாவும் அரிசி இலவசம், 12-ம் வகுப்பு பள்ளிப்படிப்பும் முடிந்து தேர்வு பெற்ற மாணவர்களுக்கு கம்ப்யூட்டர் இலவசம் என்று தன் பங்குக்கும் இலவசங்களை அறிவித்துள்ளார். ஒருவர் கலர் டிவி கொடுக்கிறார். மற்றவர் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு கம்ப்யூட்டர் கொடுக்கிறார். ஒன்று தன் பேரப்பிள்ளை நடத்தும் சுமங்கலி கேபிளின் வியாபாரத்தைப் பெருக்கும் என்று கணக்கில் கொடுக்கப்படும் இலவசம்.


திமுக முதன் முதலில் ஆட்சிக்கு வந்து தேர்தலில், ரூபாய்க்கு மூன்று படி அரிசி இலவசம் என்று பிரசாரம் செய்து, அரசுப் பொறுப்பேற்ற பின், "மூன்று படி எங்கள் லட்சியம், ஒரு படி நிச்சயம்" என்று கோசம் இட்டு பின் அதுவும் பரீட்சார்த்தமாக, சென்னையிலும் கோவையிலும் மாத்திரம் என்று சொல்லி பின் அதுவும் ஒருமாதத்திற்கு மேல் மரித்தும் விட்டது, 40 வருடங்களுக்குப் பின் யாருக்கு திமுக மரபும் சிந்தனையும் ஞாபகமிருக்கும். "சொல்றாரு, கொடுக்காம இருப்பாரா?" என்பது சாதாரண மக்களின் ஒரு பிரிவின் எதிர்பார்ப்பு.



கருணாநிதி, சாமர்த்தியக்காரர். தந்திர சாலி. சொல் ஜாலத்தில் எல்லாவற்றையும் சாதித்துக் கொள்பவர். அவரே தடுமாறி உண்மையை வெளியிட்டுவிட்டார். இந்த இலவசங்கள் பற்றி ஹிந் துஸ்தான் டைம்ஸ் என்னும் வடநாட்டு ஆங்கில பத்திரிகை கேட்டபோது, "அது அரசைக் கைப்பற்றுவதற்குத் தான்" என்று வாய் தவறி சொல்லிவிட்டார்.

தமிழகத்திலேயே சன் டிவி தவிர வேறு எதுவும் தெரியாதவர்களுக்கு வடநாட்டு ஆங்கில பத்திரிகையில் சொன்னதா தெரிய வரப்போகிறது? பின் மன்மோகன் சிங்கின் பிரச்சாரக் கூட்டத்தில், "மத்திய அரசு உதவும் என்ற நம்பிக்கையில் தான் என் திட்டங்களை தேர்தல் அறிக்கையாகத் தந்துள்ளேன். இதோ பிரதம மந்திரி முன்னிலையிலேயே நான் இதை அறிவிக்கிறேன்" என்று சொல்லியும் பார்த்தார் கருணாநிதி. மன்மோகன் சிங் இது பற்றியோ, தயாநிதி மாறன் டாடாவை சலுகை விலையில் 33வீத பங்கு கேட்டு மிரட்டியது பற்றியோ வாய் திறக்கவில்லை.
இதெல்லாம், சன் டிவியின் தரும் வழங்கும் செய்திகள், பிரசாரங்கள், இருட்டடிப்பு கள் தவிர வேறு ஏது தெரியாத பெரும்பான்மை தமிழ் மக்களுக்கு, தெரிய வரும் சாத்தியமில்லை.

ஜெயலலிதாவின் தேர்தல் பிரசாரத்திற்குக் கூடும் கூட்டத்தைக் கண்டு, அவருக்கு எதிரான எந்த சதியும் அவரை முற்றாக வீழ்த்திவிடவில்லை என்று தெரிய வைக்கிறது.
ஜெயலலிதா பிரசாரம் தொடங்கிய நாட்களில் வந்த கருத்துக் கணிப்புகள், ஜெயலலிதாவுக்கு அமோக வெற்றியை முன்னறிவித்தன. அதற்கு சில நாட்கள் பிறகு தாமதமாக, யோசித்து கணக்கிட்டுத் தயாரித்த இலவசத்திட்டங்களின் தேர்தல் அறிக்கையோடு கருணாநிதி தன் பிரசாரத்தைத் தொடங்கிய பின்னும் கொஞ்ச நாட்களுக்கு ஜெயலலிதாவின் அமோக வெற்றி முன்னறிவிப்புகள் தொடரத்தான் செய்தன. ஆனால், நாளாக ஆக, கருணாநிதிக்கான கூட்டங்கள் தொடர்ந்து பெருகப் பெருக, கருத்துக் கணிப்புகள், யாருக்கும் வெற்றி நிச்சயமில்லை, இழுபறிதான் என்று சொல்லின சில கருத்துக் கணிப்புகள். கடைசியாக, தேர்தலுக்குப் பின் வந்துள்ள தேர்தல் கணிப்பு (Exit Poll) திமுக பெரும்பான்மை வெற்றி பெரும் என்று சொல்கின்றன. இது உண்மையானால், இதன் பெருமை பூராவும், சன் டிவியின் ஏகபோக பிரசாரத்திற்கும், இருட்டடிப்பிற்கும், கருணாநிதியின் தந்திரோபாய திறமைக்கும் தான் சேரும். ஜெயலலிதா இன்னும் நம்பிக்கை இழக்கவில்லை. 2001-லும் இக்கருத்துக் கணிப்புக்கள், தேர்தலுக்குப் பின் வந்த கணிப்புகளும் இப்படித்தான் திமுகவின் பெரும்பான்மை வெற்றியைப் பறை சாற்றின், ஆனால் நடந்தது என்ன? என்று கேட்கப் படுகிறது, ஜெயலலிதாவின் தரப்பிலிருந்து. 2001 மனத்திடம் தரலாம். 2006க்கு 2001 திரும்புமா என்ன? நாளை தெரியும்.



விளம்பரம்
VLAMBARAM
விளம்பரம் பத்திரிகை விளம்பரம் பப்க்கேஷன்ஸ் ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள்.

**பதிப்புரிமை:** 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ்.
விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram, P.O. Box 37527, 31 Tapscott Road, Toronto, ON M1B 5P9, Canada
TEL: 416-282-8059 FAX: 416-282-4978
e-mail: vlambaram@sympatico.ca Web: www.vlambaram.com

HOME INSPECTION
• வீடு தரமானது என உறுதிப்படுத்திக் கொள்ள... • வீடு பராமரிப்பு பற்றி விளக்கமாகத் தெரிந்து கொள்ள...
ந. தயாபரன்
Certified Inspection Specialist
Expert Building Inspections LTD.
• Exceed the Standards • Industry Canada Registered • Professionals Serving the GTA • On site Report
24 /7 - Toll Free - 1.866.373.3315 416.727.8336

50களின் முற்பகுதியில் எழுத ஆரம்பித்து இன்றுவரை எழுத்துலகப்பயணத்தில் இருப்பவர். பெண்களின் சமூக விடுதலைக்கான கருத்துக்களை தனது சிறுகதைகளில் பொறிக்கும் பொழுது குடும்ப உறவின் பிணைப்பு விடுபடாமல் வலுப்படும்படி எழுதுபவர். இவரது சிறுகதைகளில் நம்பிக்கையூட்டும் உணர்ச்சித்திரங்கள் இப்படித்தான் வாழ்ந்து முடிப்போம் என்ற கருத்தை தனது பாணியில் வகுத்து செயற்படும் கதாபாத்திரங்களை நாம் தரிசிக்க முடியும். வாழ்க்கைப் பயணத்தில் எழுதியவை பல கைநழுவி சென்ற நிலையிலும் 'குறமகள் கதைகள்', 'உள்ளக்கமலமடி' ஆகிய இரு சிறுகதைத் தொகுதி களையும் 'மாலை சூட்டும் நாள்' கவிதைத் தொகுதியையும் தந்துள்ளார். அத்துடன் பல கட்டுரைகள், பல நாடகங்களை எழுதியும் சிலவற்றில் நடித்தும் இருக்கின்றார். ஈழத்துப் பெண் மூத்த எழுத்தாளர் திருமதி. வள்ளிநாயகி இராமலிங்கம் (குறமகள்) அவர்களை விளம்பரம் பத்திரிகைக்காக சந்தித்தேன். - ஆத்மன்

**• நீங்கள் எழுது ஆரம்பித்த காலம் 50-55 களுக்கு இடைப்பட்ட காலம். பெண் எழுத்தாளர்கள் மிகவும் குறைவாகவே இருந்தகாலம். உங்களது முதல் படைப்பு வெளிவந்த பொழுது தமிழ் இலக்கிய உலகம், இலக்கியவாதிகள் எப்படிப் பார்த்தனர்? எந்த பெயரில் எழுத ஆரம்பித்தீர்கள்?**

பாலர்கழகம் போன்றவற்றில் எழுதும் பொழுது வள்ளிநாயகி சின்னத்தம்பி என்ற பெயரில் எழுதிவந்தேன். அதன்பின் 'சிறுகதை' முதன்முதலாக எழுதியபொழுது 'குறமகள்' என்ற புனைப்பெயரைத்தாங்கினேன். அந்தச்சிறுகதை 'கொள்கைத்தடாகத்தில்' என்ற பெயரில் அமைந்திருந்தது. ஆசிரியர் கலாசாலையில் இடம் பெற்ற போட்டியில் முதலாமிடத்தைப் பெற்றுக்கொண்டது. இதைத்தொடர்ந்து 'போலி கௌரவம்' என்ற பெயரில் எனது இரண்டாவது சிறுகதை அமைந்தது. எனது முதலிரண்டு சிறுகதைகளும் சீதனக்கொடுமைபற்றியே கூறியது. 'போலி கௌரவம்' என்ற சிறுகதை தான் 'ஈழகேசரி' பத்திரிகையில் முதன்முதலாக பிரசுரமானது. இரு சிறுகதைகளைக் கண்டபின்னர் திரு. கனக. செந்தில்நாதன் அவர்கள் எனது வீட்டுக்கு வந்தபொழுது சீதனத்துக்கு எதிராகப் போர்க்கொடி துவக்கி விட்டீர்கள் என்று என்னை வாழ்த்தினார்.

**• உங்களுடைய காலத்தைப்பார்த்தால் மகாகவி உருத்திரமூர்த்தி, S. பொன்னுத்துரை, கனக. செந்தில்நாதன் போன்ற படைப்பாளிகளுடன் நீங்கள் பழகியிருக்கின்றீர்கள். அவர்களுடைய படைப்புக்களை நன்கு அறிவீர்கள். அவர்களுடனான உங்களுடைய அனுபவங்களை எமது வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வீர்களா?**

நான் பாடசாலையில் படித்துவிட்டு வெளியில் காலடிவைத்த பொழுதுதான் எனக்கு வெளியுலகம் தெரிந்தது. நிறைய வாசிப்பதுண்டு. ஆனால் ஆரம்பகாலத்தில் எழுத்தாளர்கள் என்று அறிமுகமில்லை. வெளியுலகுக்கு காலடியெடுத்து வைத்தபொழுது முதன்முதலாக அறிமுகமானவர் எனது நண்பியும் எழுத்தாளருமான 'புதுமைப்பிரியை' அவரைத்தொடர்ந்து நான் ஆங்கிலமொழி மூலம் படித்தமையினால் தமிழ்மொழியில் நல்ல அறிவு இல்லாமல் இருந்தது. ஆகவே தமிழில் நல்ல அறிவு பெறவேண்டுமென்ற அவா இருந்தது. அதனால் வாரவிடுமுறை நாட்களில் நாவலர் பாடசாலையில் பாலர் பண்டிதர் வகுப்புகளுக்குச் செல்வதுண்டு. அங்கு வேந்தனர், புதுமை லோகன் போன்றோரைச் சந்தித்தேன். வேந்தனார் பல கட்டுரைகள் பத்திரிகைகளில் எழுதுபவர், சிறந்த பேச்சாளர், சிறந்த கவிஞர். அவர் மூலம் பல செய்யுள்கள் பற்றி நிறையவே அறியக்கிடைத்தது. மற்றும் புதுமை லோகன் மூலமாக ஆனந்த அச்சகத்துக்குப் போக கிடைத்தது. ஆனந்த அச்சகத்தில் 'வரதர்' என்ற எழுத்தாளர் ஆனந்தன், தேன்மொழி போன்ற சஞ்சிகைகளை நடத்தி வந்தவர். அடிக்கடி அங்கு சென்று அவருடன் பேசுவேன். பல விடயங்களை நிறையவே விவாதிப்பேன். அவர் மூலம் மகாகவி எனக்கு அறிமுகமானவர். எங்கள் அயலூரைச் சேர்ந்தவர். 'தேன்மொழி' க்கு பொறுப்பாக இருந்தவர். கவிதைச் சஞ்சிகையாக இருந்ததால் எனக்கு எழுத வாய்ப்பு கிட்டியது. மகாகவியினுடைய சிந்தனைகள், கருத்துக்கள் எனக்குப் பிடிக்கும். வரதர், மகாகவி போன்றோரின் அறிவுரைகள் எனக்கு நிறையவே கிடைத்தன. மற்றும் கனக. செந்தில்நாதன், எஸ். பொன்னுத்துரை, கவிஞர் கந்தவனம் போன்றோரின் தொடர்பு எனக்கு நிறையவே ஊக்கத்தைக் கொடுத்து கனக. செந்தில்நாதன் என்னைத் தொடர்ந்து எழுதுவதற்கு ஊக்கப்படுத்திக் கொண்டேயிருந் தார். நான் விவாகமான பின்னர் எனக்குப் பொறுப்புக்கள் கூடிவிட்டன. இதனால் எழுதுவது குறைவு, மேடைப்பேச்சுக்கள் குறைவு. எனது வீட்டுக்கு ஆட்களை அனுப்பி ஊக்குவிப்பார். 'மத்தாப்பு' என்ற தொடர் நாவல் எழுதுவதற்கும் அதனூடாக எஸ்.பொ. வின் அறிமுகம் கிடைத்தது. எஸ். பொ. வின் எழுத்துக்களில் புதுமையும், சொல்வளமும் நிறைய இருந்தன. வித்தியாசமான எழுத்தாளர். தமிழ் எழுத்தாளர் சங்க கூட்டங்களுக்கும் அடிக்கடி சென்று வருவேன். இதனால் மேலும் பல எழுத்தாளர்கள் அறிமுகமானவர்கள். குறிப்பாக டொமினிக்ஜீவா, டானியல் போன்றோரையும் குறிப்பிடலாம். நான் பெண்ணாக இருப்பதால் அடிக்கடி அவர்களைச் சந்திக்கமுடிவதில்லை.

**• உங்களுடைய காலத்தில் மிகவும் குறைந்தளவு பெண் எழுத்தாளர்களே இருந்திருக்கின்றார்கள். அந்த எழுத்தாளர்களுடைய எழுத்துக்களில் எப்படியான கருக்கள் - கருத்துக்கள் தென்பட்டன?**



பெண் எழுத்தாளர்கள் என்று பார்க்கும் பொழுது வலுகுறைவாகவே இருந்தார்கள். ஆனாலும் சில எழுத்தாளர்கள் இருந்தார்கள். தொடர்ந்து எழுதுவதைக் காணமுடியவில்லை. இந்த நிலையில் மா. மங்களம்மான் என்ற நல்லபெண் எழுத்தாளர் இருந்தார். அவர் காந்தீயப்போக்கு கொண்டவராகவும், கதரையே கட்டுபவராகவும் இருந்தார். அவர் 'தமிழ் மகள்' என்ற பத்திரிகையை நடத்திவந்தார். சற்றுபணபலமும் அவரிடம் இருந்தது. பெண்களுக்காக ஒரு பெண்ணால் முதன்முதலாக வெளிவந்த பத்திரிகை 'தமிழ் மகள்' தான் என்று நினைக்கின்றேன். பத்திரிகை ஆசிரியராகவும் அவரே இருந்தார். அவரது எழுத்துக்கள் எனக்கு உத்வேகத்தைக் கொடுத்தது. அவரே எழுத்துக்கள் எனக்கு நன்றாகவே பிடித்தது. எனினும் பிற்காலத்தில் அவர் வறுமைப்பட்டுப்போனார். சிலர் அவரது கருத்துக்களை விமர்சிப்பார்கள். சும்மா அலட்டிக்கொண்டு திரியிறா என்று கூறுவார்கள். அவரது எழுத்துவல்லமை சேவை மனப்பான்மையைக் கண்டுகொண்டதாகத் தெரியவில்லை. சிலவேளை பெண் என்பதால் இருக்கலாம். அதற்குப் பின்னர் பண்டிதை வேதநாயகி, பண்டிதை பரமேஸ்வரி, பண்டிதை சத்தியதேவி துரைசிங்கம், பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி போன்றோர் இருந்தார்கள். இவர்கள் குறிப்பாக கட்டுரைகள், மேடைப்பேச்சுக்களில் அதிக கவனம் செலுத்தியவர்கள். ஆக்க எழுத்துக்கள் தந்ததாக எனக்கு நினைக்கவில்லை. அதன்பின்னர் டாக்டர் கணேசான் என்ற எழுத்தாளர் நல்ல கதைகளை எழுதியிருந்தார். என்னுடைய சமகாலத்தில் புதுமைப்பிரியை என்பவர் இருந்தார். இவரும் நல்ல கதைகளை எழுதியிருந்தார். 'இரத்தபாசம்' என்ற கதையை எழுதி 'சுதந்திரன்' பத்திரிகையின் பரிசு பெற்றவர். பின்பு விவாகமான பின் சிறிதுகாலம் மேடைகளில் மாத்திரம் தோன்றிக் கொண்டிருந்தார். தன்னுடைய குடும்பப் பொறுப்புகள் காரணமாக எழுதுவது குறைந்திருந்தது. தற்பொழுது நிறையவே எழுதி நூல்களையும் வெளியிட்டிருக்கின்றார். இதற்குப்பிற்பாடு பவானி, குந்தவை, சாந்தினி, சகிதேவி தியாகராஜா, சிதம்பர பத்தினி என்பவர்களும் இருந்தார்கள். அடுத்த சந்ததியாக யோகா பாலச்சந்திரன், பத்மா, அன்னலட்சுமி இராசதுரையும் தொடர்ந்து எழுதிக்கொண்டே இருக்கின்றார்கள். இதே காலகட்டத்தில் கிழக்கிலங்கையில் கங்கேஸ்வரி, பாலேஸ்வரி, பாலாம்பிகை என்று எழுத்தாளர்களும் இருந்தார்கள். அனைவரின் படைப்புகளில் சமூகம்சார்ந்த குறிப்பாக பெண்கள் சார்ந்த விடயங்கள் பல இருந்தன.

**• மற்றைய எழுத்தாளர்களைவிட, உங்களுடைய எழுத்துக்கள் எப்படிப்பட்டவை? தனித்துவமாக எவற்றைக் கூறலாம்? 'குறமகள்' என்ற பெண் எழுத்தாளரின் பெண்ணின் மொழி பற்றிக் கூறுங்கள்?**

என்னையே நீங்கள் கேட்டால் நான் எப்படிக் கூறுவது? பெண் எழுத்தாளர் என்று கூறப்படுவதை வெறுக்கின்றேன். எழுத்தாளர் என்று கூறலாம். நான் புதுமைப்போக்கை விரும்புபவள். பெண்களை முன்னேற்ற வேண்டுமென விரும்புபவள். அந்தக் காலங்களில் கிராமங்களில் பெண்கள் வயதுக்கு வந்துவிட்டார்கள் என்றால் வீட்டிலேயே மறித்து விடுவார்கள். கல்விகற்க பாடசாலைக்குப் போக விடமாட்டார்கள். கல்வியின் தேவையை அறிந்தவர்கள், கொஞ்சம் பணம் இருந்தவர்கள் விடுதிப்பாடசாலைகளுக்கு தமது பெண் பிள்ளைகளை அனுப்பிப் படிப்பிப்பார்கள். என்னுடன் படித்தவர்கள் பலர் கல்விகற்பதையே நிறுத்திவிட்டார்கள். சிலர் இராமநாதன் கல்லூரி, உடுவில் பெண்கள் கல்லூரி, இளவாலை மகளிர் கல்லூரி போன்ற பாடசாலைகளில் படித்தார்கள். நானும் இளவாலை மகளிர் கல்லூரியில் விடுதியிலிருந்து படித்திருக்கின்றேன். ஆகவே முன்னர் கூறியவர்களைத் தூண்ட வேண்டும், அவர்களது பெற்றோர்கள் சிந்திக்கவேண்டும் என்பதில் ஆர்வமாகச் செயற்பட்டேன். பெண்களின் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கின்றேன். அடுத்து சீதனக் கொடுமையை சீதனத்தை ஒழிக்க வேண்டுமென்பதில் கருத்தாக இருந்தேன். சமூகத்தில் பெண்களுக்கும் சமஉரிமை இருக்கின்றது என்பதைக் காட்டுவதற்கு என்னுடைய கதைகளில் படிப்படியான தூண்டுதல்களைக் கடைப்பிடித்திருக்கின்றேன். சமூகப்பொறுப்புக்கள் குடும்பப்பொறுப்புக்களில் பெண்களுடன் ஆண்களும் பங்கெடுத்துக் கொள்ள வேண்டுமென எனது எழுத்துக்களில் கூறியிருக்கின்றேன். எனினும் பேச்சுக்களில் அதிகம் தீவிரம் காட்டியிருக்கின்றேன். ஆனால் எழுத்தில் சமூக கட்டமைப்புக்குள்ளிருந்து பெண்களைச் சிந்திக்கப் பண்ணியிருக்கின்றேன் என்று கூறலாம்.

**• எழுத்துத்துறையில் மட்டுமல்லாது நாடகத்துறையிலும் காலடி வைத்திருக்கின்றீர்கள். நாடக அரங்கப்பயிற்சியை முறையாகப் பெற்றவர்களில் நீங்களும் ஒருவர். அதேவேளை நாடக முயற்சிகளில் உங்களுடைய ஈடுபாடு குறித்து சுருக்கமாக கூறுவீர்களா?**

எனக்கு சின்னவயதிலேயே கலைகளில் ஆர்வம் இருந்தது. அயல் கிராமங்களும் காரணமாக இருக்கலாம். வைரமுத்து அவர்களுடைய நாடகங்களைப் பார்ப்பது வழக்கம். இசையில் மிக ஈடுபாடு இருந்தது. ஆரம்ப இசைஅறிவு எனக்கு இருக்கின்றது. நாடகங்கள் என்னும் பொழுது பாடசாலைகளில் எங்களை எடுப்பார்கள். என்னை மாதிரி துணிந்தவர்களை நாடகத்துக்கு அழைப்பார்கள். பல நாடகங்களில் நடித்திக்கின்றேன். ஆசிரியராக வந்த பின்னர் சுப்பையா மாஸ்ரிடம் சென்று நாட்டியம் பழகி நாட்டிய நாடகங்களை வழங்குவோம். ஆசிரியராக இருந்த பொழுது பாடசாலைகளில் நாடகப்போட்டிகளுக்கு பல நாடகங்களை எழுதியிருக்கின்றேன். பல நாட்டிய நாடகங்களை எழுதி, இயக்கியிருகின்றேன்.

இதற்குப் பின்னர்தான் நாடக டிப்போளமா ஒன்று வைக்கிறார்கள் என A.T பொன்னுத்துரை அவர்கள் விண்ணப்பப்பத்திரம் தந்து விண்ணப்பித்தேன். ஒருவருடம் அங்கிருந்து பயிற்சி பெறவேண்டும். என்னுடைய கணவரின் முழு ஒத்துழைப்புடன் பயிற்சியை முழுமையாகப் பெற்றேன். அதன்பின் 'புதியதொரு வீடு' நாடகம் தாசிஸியஸ் அவர்கள் பழக்கியவர். அவருக்கு

தொடர்ச்சி 18 ஆம் பக்கம்


# APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்பு திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing

- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL

# உடல் இயலாமைக்கான காப்புறுதி

**Disability Insurance**

## உடல்நிலை பாதிக்கப்பட்டு தொடர்ந்து செய்து வந்த தமது தொழிலை செய்ய முடியாது வருமானத்தினை இழந்து ஒருவர் தமது வருமானத்தினை தொடர்ந்தும் பெறுவது எப்படி?

இந்த நிலைமையில் உடல்நிலைமை பாதிக்கப்பட்டு, தொடர்ந்து செய்துவந்த தமது தொழில் ஒன்றினை செய்யமுடியாது வருமானத்தினை இழந்து ஒருவர் தமது வருமானத்தினை தொடர்ந்தும் வீட்டில், படுக்கையில் ஓய்வு நிலையில் இருந்த படியே பெறவேண்டுமானால் அதற்காக கைச்சாத்திட வேண்டிய ஒப்பந்தமே “உடல் இயலாமைக்கான காப்புறுதி”. அதாவது ஆங்கில வார்த்தையில் அடிக்கடி உதட்டில் வரும் “Disability Insurance” என்பதாகும்.

எந்த நோயினால் பாதிக்கப்பட்டு குறிப்பிட்ட ஒரு தொழிலை செய்யமுடியாத நிலைமைக்கு தள்ளப்பட்டீர்களோ அந்த நிலைமையில் இருந்து மீளும்வரை தொழில் செய்யும் இடத்தில் இருந்து சம்பளம் பெற்றமாதிரி தொடர்ந்து பெற்ற வண்ணமே இருக்கலாம். காப்புறுதி கம்பனியில் இருந்து தொடர்ந்து பெற்றுக்கொண்டு இருக்கும் இந்நிவாரணத்திற்கு வருமான வரி என்பதே செலுத்த வேண்டிய அவசியம் இல்லை.

ஆனால் இக்காப்புறுதி ஒப்பந்தத்திற்கு விண்ணப்பிக்கும் போது பொதுவாக சகல காப்புறுதி கம்பனிகளும் சகல மருத்துவ, காப்புறுதிகளுக்கு விலைகள் தீர்மானிக்கும் போது கருத்தில் கொள்ளும்.

- காப்புறுதியில் சேர்ந்து கொள்பவரின் வயது
- ஆணா? பெண்ணா? என்ற விவரம்
- காப்புறுதியில் சேரும் போது மருத்துவ உடல் நிலைமைகள் உட்பட மேலதிகமாக கருத்தில் கொள்ளும் இரு விடயங்கள் இங்கு முக்கியமானதாகும்.

அவையாவன பின்வருமாறு!

- காப்புறுதியில் சேர்ந்து கொள்பவரின் வருமானம்
- செய்யும் தொழில்

உடல் இயலாமை நிலைமை ஏற்பட்டு வருமான இழப்பீடு ஒன்றினை எதிர்கொள்பவர் எவ்வளவு வருமானத்தினை மாதா மாதம் தமது தொழில் மூலம் பெற்று வந்தாரோ அதே வருமானத்தினையே தொடர்ந்து இங்கு காப்புறுதி கம்பனியில் இருந்து இழப்பீட்டு நிவாரணமாக பெறப் போகின்றார். காப்புறுதி கம்பனி வழங்கப்போகும் இவ்வருமான இழப்பீட்டு நிவாரணத்தில் தொழிலில் இருந்து பெறப்படும் வருமானத்திற்கு வருமான வரி செலுத்துவது போல செலுத்த வேண்டியதில்லை என்பதால், தொழில் வருமானத்தில் இருந்து பெறப்படும் தொகையினை விட சற்று குறைவானதான தொகையினையே காப்புறுதி கம்பனி இழப்பீட்டு நிவாரணத்தினை வழங்கிக் கொள்ளும். இவ்வருமான இழப்பீட்டு நிவாரணம் என்பது ஒருவரின் வருமானத்திற்கு ஏற்றவாறு வேறுபடும் என்பதனை பின்வரும் அட்டவணை மூலம் புரிந்து கொள்ளலாம்.

**வரி கழிக்கமுன்பு வரி இல்லாது தொழில் வருமானத்தில் இழப்பீடு**

| | | |
|---|---|---|
| $15,000 | $950 | 76% |
| $25,000 | $1450 | 69.6% |
| $35,000 | $1900 | 65.1% |
| $45,000 | $2350 | 62.7% |
| $60,000 | $2950 | 59% |
| $80,000 | $3700 | 55.5% |
| $100,000 | $4300 | 51.6% |
| $150,000 | $5925 | 47.4% |
| $250,000 | $8000 | 38.4% |

மேற்குறிப்பிட்ட அட்டவணையின்படி $250,000 வருட வருமானம் உள்ளோர் உடல் இயலாத காரணத்தினால் வேலை இழந்து நிவாரணம் பெறும்போது பெறப்படும் தொகை அவரது சம்பளத்தில் 38.4% வீதம். அதாவது மாதம் $8000 படி X 12 மாதம் = $96,000 டொலர் மட்டுமே நட்ட நிவாரணம் பெறலாம். ஏனெனில் இவரது வருமான அதிகரிப்புக்கு ஏற்றமாதிரி அதிக வரி செலுத்துவதாலேயே இவ்வரிப்பணம் வரி இல்லாத இழப்பீட்டு நிவாரணம் என குறிப்பிட்டு இழப்பீட்டு நிவாரணம் குறைக்கப்படுகின்றது.



இக்காப்புறுதி ஒப்பந்தத்திற்கு விண்ணப்பம் செய்யும்போது தொழில் மூலம் பெறும் வருமானம் என்பதும் நிரூபிக்கப்படல் வேண்டும். இது தவிர செய்யும் தொழில் என்பது காப்புறுதி ஒப்பந்தத்தின் விலையினை நிர்ணயிக்கும் இன்னோர் விடயமாகும். இது பல குழுவகைக்குள் பிரிக்கப்படுகின்றது. ஆபத்தான தொழில்களில் இருப்பவர்களுக்கு கட்டுப்பணம் சற்று அதிகமாகவே இருக்கும். இத்தொழில்களையும் பின்வரும் ஐந்து வகைக்குள் காப்புறுதி நிறுவனம் பிரித்து வைத்துள்ளது.

வகுப்பு (1) - மிகப்பெரிய ஆபத்துக்கள் இல்லாத ஓரளவு கடுமையான தொழில்கள். உதாரணமாக, சாரதி தொழில் செய்வோர், தொழிற்சாலை ஊழியர்கள், இயந்திரங்களை இயக்குவோர்.

வகுப்பு (2) - ஆபத்துக்கள் என இல்லாது திறமைகளை உபயோகித்து (Skill job) தொழில் செய்வோர். உதாரணமாக, மெக்கானிக், எலெக்றிசியன், துணிகள் தைப்பவர்கள் போன்றவர்கள்.


**சிவ. பஞ்சலிங்கம் B. Com,**

(Licensed Insurance Broker)


காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:

416.321.0999


வகுப்பு (3) - ஆபத்துக்கள் இல்லாது ஒரே இடமாக இருக்காது தொழில் புரிவோர். உதாரணமாக செய்தி நிருபர், காப்புறுதி இழப்பீட்டு மதிப்பீட்டாளர் போன்றவர்கள்.

வகுப்பு (4) - ஆபத்து இல்லாத ஆனால் குறிப்பிட்ட தொழில் திறமையுள்ளோர். உதாரணமாக விற்பனைத் தொழில் துறையில் உள்ளோர், தொழில் நுட்பவியலாளர் போன்றவர்கள்.

வகுப்பு (5) - அதி உயர் கல்வித் தகைமை, திறமை உள்ளோர். உதாரணமாக மருத்துவர், பொறியிலாளர்.




CENSUS 2006

உங்கள் குடிசன மதிப்பீட்டு அட்டையை இதுவரை நிரப்பி அனுப்பாவிட்டால் பின்வரும் தொலைபேசி எண்ணிற்கு அழையுங்கள்:

1 877 594-2006

உங்கள் குடிசன மதிப்பீட்டு அட்டையை நிரப்ப உதவுவதற்காக தமிழ் மொழியில் உரையாடக் கூடிய ஒரு குடிசன மதிப்பீட்டு உதவியாளருடன் பேச விரும்புவதாக கூறுங்கள்.

நீங்கள் குடிசன மதிப்பீட்டு அட்டையில் தெரிவிக்கும் தகவல்கள் சட்டப்படி அரசாங்கத்தால் இரகசியமாக வைத்திருக்க வேண்டும். கனடாவில் வசிக்கும் ஒவ்வொருவரும் இக்குடிசன மதிப்பீட்டு அட்டையை நிரப்பி அனுப்புதல் வேண்டும்.

அழையுங்கள்: 1 877 594-2006

கேட்கும் சக்தி குறைந்தவர்கள் அழையுங்கள்: 1 888 243-0730

Statistics Canada Statistique Canada

Canada

# எனது நாடக அனுபவங்கள்

முன்னுரை

'நாடகமே உலகம்' என்பதிலும் 'உலகமே நாடகந்தான்' என்பதே பொருத்தமானது. இரண்டுக்கும் என்ன வேறுபாடு என்றால், முன்னதில் நாடகம் அழுத்தம் பெறுகின்றது. பின்னதில் உலகம் முக்கியத்துவம் பெறுகின்றது. உலகம் இன்றி நாடகம் இல்லையாதலால் 'உலகமே நாடகம்' என்பது உண்மை நிலையைப் புலப்படுத்துவதாக உள்ளது.

'All the world is a stage ...' என்று தொடங்கும் நாடக மேதை சேக்ஸ்பியரின் அடிகள் பிரபலியமானவை. 'உலகமே ஓர் அரங்குதான். அதில் மக்கள் வெவ்வேறு பாத்திரங்களை நடித்துவிட்டுச் செல்கிறார்கள்' என்பது அவ்வடிகளின் பொழிப்பான பொருள். சேக்ஸ்பியரது காலத்துக்கு(1564-1616) எத்தனையோ நூற்றாண்டுக்கு முன்னதாகவே உறையூர் முதுகண்ணன் சாத்தனார் என்ற புலவர்,

'... ... ... ... ... ... ... விழவிற்
கோடியர் நீர்மை போல முறைமுறை
ஆடுநர் கழியுமிவ் வுலகத்து ... ...'
(புறம் 29)

என்று பாடியிருப்பதை யாரும் கவனிப்பதில்லை. கோடியர் - கூத்தர். 'இவ்வுலகத்து வாழ்க்கை விழாக் காலத்திற் கூத்தர் வெவ்வேறு கோலந் தாங்கி ஆடும் நாடகம் போன்றது' என்பது இதன் பொருள்.

நாடகம் என்ற சொல்

நாடகம் என்ற சொல் ஆரிய மொழியின் 'நாட்டக' என்ற சொல்லின் தமிழ் வடிவம் என்பர் சிலர். நான் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை.


நாடகம் ஒரு தனித்தமிழ்ச் சொல். நாடு - அகம் = நாடகம். அகம் என்ற சொல்லுக்கு வீடு அல்லது உள்ளம் என்று பொருள்.

நாடு என்ற சொல் பெயராகவும் வினையாகவும் வேடம் போடும் தன்மையது. பெயராகக் கொண்டால், நாடகம் என்பதற்கு நாட்டின் நடப்புகளைக் காட்டும் வீடு என்றோ, நாட்டின் உணர்வுகளைப் பிரதிபலிக்கும் உள்ளம் என்றோ பொருள் கொள்ளலாம். இருவகைப் பொருளும் அரங்கில் நடித்துக் காட்டப்படும் நாடகத்துக்குப் பொருத்தமாகவே உள்ளன.

இனி, நாடு என்பதனை விரும்பு என்ற பொருளில் வினையாகக் கொண்டால், நாடகம் என்ற சொல் வினைத்தொகையாக நிற்கும். வினைத்தொகை என்பது விகுதியும் காலங்காட்டும் இடைநிலையும் தொக்கி நிற்கும் (கெட்டு நிற்கும்) பெயரெச்சம். காலங்காட்டும் இடைநிலை தொக்கி நிற்பதால் பெயர்முன் நிற்கும் வினை முக்காலத்துக்கும் உரியதாகி நிற்கும்.

அவ்வகையில் நாடகம் என்னும் வினைத்தொகை நாடிய (விரும்பிய), நாடுகின்ற (விரும்புகின்ற), நாடும் (விரும்பும்) அகம் என முக்காலத்தையும் காட்டி நிற்கும் சொல் ஆகின்றது. இதில் இருவகைப் பொருள் பொதிந்திருப்பதைக் காணலாம்.

(1) ஒன்று, மக்கள் விரும்பிக் கூடும் வீடு அல்லது இடம் என்பது. இப்பொருளில் நாடகம் என்ற சொல் நாடகம் ஆடப்படும் கொட்டகையைச் சுட்டுவதாக உள்ளது.



(2) மற்றைய பொருள் விரும்பும் உள்ளம் என்பது. இதில் அகம் என்பதற்கு உள்ளம் என்று பொருள் கொள்ளப்பட்டது. இது மக்கள் விரும்பிப் பார்க்கும் கலையாகிய நாடகத்தைக் குறிப்பதாயிற்று.

'நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான்நடுவே
வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைக-
'ின்றேன்'

என்ற மணிவாசகப் பொருமான் வாக்கில் 'நாடகத்தால்' என்பது 'நாட்டம் மிகுந்த உள்ளத்தால்' என்ற பொருளில் வந்தது. நாட்டம், விருப்பம், ஆவல், ஈர்ப்பு, வேட்கை எல்லாமே உள்ளம் ஒன்றன்மீது கொண்டுள்ள பற்றுக்கோட்டை வெளிப்படுத்துவன.

'நாடகத்தால் உன் அடியார் போல் நடித்து' என்ற திருவாசக அடி -

(1) ஒரு பாத்திரத்தை அதுபோல நடித்துக் காட்டுவது,
(2) அந்த நடிப்பைப் பார்க்கப் பலரும் விரும்புவது உண்டு, பார்த்து மகிழ்வது இயல்பு

என நாடகத்தின் பண்பையும் பயனையும் கொண்டதாக இருக்கின்றது.

அகம் என்பதற்கு வீடு என்ற பொருளும் உண்டு என்று பார்த்தோம். வீடு சுகத்துக்கு உரியது, இன்பந் தருவது, மன நிம்மதியை அளிப்பது. இதே பயன்களை அரங்கமும் தரவல்லது. எனவே நாடகம் என்பதிலுள்ள 'அகம்' அரங்கத்தையே குறிப்பதாகவுள்ளது. அவ்வகையில் நாடுஅகம் விரும்பத் தகுந்த அரங்கம் என்ற பொருள் உடையதாக இருப்பதைப் பார்க்கிறோம்.

எனது அநுபவங்கள்

இவ்விதமான நாடகத்தில் நான் நாட்டம் கொண்டது, அது என்னை நாடி வந்தது, அதில் ஈடுபட்ட காலங்களில் பட்ட அநுபவங்கள், பெற்ற இன்பம், ஈட்டிய சாதனைகள் போன்ற வற்றையெல்லாம் முடிந்த அளவுக்கு எழுதியிருக்கிறேன்.

'முடிந்த அளவு' என்று காரணத்தோடு தான் குறிப்பிடுகின்றேன். தாயகத்தில் எனது வீட்டை இலங்கை இராணுவம் வன்முறையால் எடுத்ததைத் தொடர்ந்து, எல்லாவற்றையும் இழந்த நிலையில் கனடாவில் வாழ்ந்துவரும் எனக்கு ஒரே முதுசொம் எனது நினைவாற்றலே.

தாயகத்திலே தற்பொழுதுள்ள நிலையையில் தகவல்களையோ புகைப்படங் களையோ பெற்றுக் கொள்ளவும் வாய்ப் பில்லை. நாடகத் துறையில் என்னுடன் ஈடுபட்ட முக்கியமான கலைஞர் பெருமக்களும் காலமாகிவிட்டனர்.

இந்நிலையில் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் முன்னாள் ஆசிரியராக இருந்தவரும் என்னுடன் 'வள்ளல் குமணன்' என்ற நாடகத்தில் நடித்தவருமாகிய திரு. கே. அருளம்பலம் அவர்கள் பத்திரிகையில் வெளிவந்த நாம் நடித்த இரு படங்களை மூன்று ஆண்டுகளுக்கு முன் அனுப்பியிருந்தார். திரு. ஏ.ரி. பொன்னுத்துரை அவர்கள் மறைந்து சில நாட்களில் அவருடன் நான் நடித்த படம் ஒன்றும் வந்து சேர்ந்தது. அதுவும் பத்திரிகை ஒன்றில் வந்த படந்தான். இவற்றைத் தவிர வேறுவிதமான ஆதாரங்கள் எதுவும் என்னிடம் இல்லை. நினைவில் இருப்பவற்றை மட்டும் வைத்துக்கொண்டு எனது நாடக அநுபவங்களைப் பதிவு செய்ய முயன்றிருக்கின்றேன்.

ஏன் எழுதவேண்டும்?

ஏன் பதிவுசெய்ய முயன்றேன் என்பதையும் விளக்குதல் வேண்டும்.

கல்வி, சமயம், சமூகம், இலக்கியம், நாடகம், மேடைப் பேச்சு முதலாய எனது பன்முகப்பட்ட முயற்சிகளில் கல்வித்துறைக்கும் நாடகத்துக்கும் நான் ஆற்றிய பங்களிப்புகள் முறையான மதிப்பீட்டுக்கு உள்ளாகாதவையாக இருக்கின்றன. நான் என்னைப் பற்றி அதிகம் பேசாதவன். கல்வித் துறைக்கு நான் ஆற்றிய சேவைகளை நானே சொல்லத் தொடங்கினால் கல்விமான்களே இமைகளை அகல விரிக்கவேண்டி வரும்.

அவ்விதம் கல்வித் துறையிலோ இலக்கியத் துறையிலோ சாதித்த அளவுக்கு நாடகத்தில் எனது பெயரை நிலைநாட்ட வில்லைத்தான். பல தோணியிற் கால் வைத்துப் பயனில்லை என்று கண்டபின் கல்வியுடனும் இலக்கியத்துடனும் நின்றுவிட்டேன்.

பயனில்லை என்று கண்டது பிற் காலத்தில். அதற்குமுற்பட்ட எனது நாடக அநுபவங்கள் வீணாகிப் போகவேண்டுமா?

கூடாது என்று சொல்வதுபோல, நீண்ட காலத்துக்குப் பிறகு எனது கைக்கு வந்த மேற்சொன்ன புகைப் படங்கள் உறங்கிக் கிடந்த எனது நாடக அநுபவங்களை உயிர்ப்பித்தன.

அத்துடன் கடந்த ஆண்டு அரங்காடல் நண்பர்கள் என்னை நடிக்க வைத்ததோடு எழுதவும் தூண்டினர். அவர்களுக்காக எழுதிய கட்டுரை ஒன்று 'உதயன்' செய்தி இதழில் வெளியானது. அதனைப் படித்துப் பாராட்டியவர்கள் நாடகக் கட்டுரைகளுக்கு ஆதரவு உண்டு என்பதற்கு ஆதாரமானார்கள்.

நாடகம் தொடர்பான பல கட்டுரைகளை 'விளம்பரம்' இதழ் விரும்பி வெளியிட்டு வந்தது. எனது நாடக அநுபவங்களையும் 'விளம்பரம்' இதழுக்காகவே எழுதினேன். விளம்பரத்துக்காக எழுதினேன் என்றுகூட வைத்துக் கொள்ளலாம். அவரவர் அநுபவங்களை அவரவர் சொன்னாற் றானே மற்றவர்களுக்குத் தெரியவரும்.

தெரிந்து என்ன செய்யப் போகிறார்கள்?

பட்டறிவு

அநுபவங்களாற் பெறும் அறிவுக்குப் பட்டறிவு என்று பெயர். பட்டறிவுக்கு மற்றொரு பெயர் செயன்முறை அறிவு. புத்தக அறிவிலும் செயன்முறை அறிவு மேலானது என்பது கல்வித் தத்துவவிய லாளர் கருத்து. புத்தகங்களால் விளங்கிக்கொள்ள முடியாத பல விடயங்களை அநுபவங்களால் விளங்கிக் கொள்ள முடியும். நூலறிவுவாதிகளால் தீர்த்துக்கொள்ள முடியாத பிரச்சனைகளைப் பட்டறிவுவாதிகள் தீர்த்து வெற்றிகண்ட கதைகளும் வரலாற்றுச் சம்பவங்களும் ஏராளம்.

அநுபவங்கள் ஆளுக்காள் வேறுபடு மாயினும் ஒருவரது அநுபவங்கள் இன்னொருவருக்குப் பயன்பட வல்லது என்பது நடைமுறையாற் கண்டறியப்பட்ட உண்மையாகும். இதனாலேயே வரலாற்றுக் கல்விக்குப் பாடத்திட்டங்களில் முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது.

ஒருவருடைய அநுபவங்களிலிருந்து இன்னொருவர் பெறக்கூடிய பயன்பாடுகளும் அவரவர் தகைமை, மனோநிலை, தேவை என்பவற்றுக்கு ஏற்ப வேறுபடும்.

எனது அநுபவங்கள் இங்கே நாடகம் தொடர்பானவையாதலால் நாடகத்தோடு தொடர்பு உடையவர்களுக்கும் நாடக இரசிகர்களுக்கும் ஏதாவது ஒரு வகையில் பயனளிக்கும் என்ற நம்பிக்கையும் இதனை எழுதத் தூண்டியது.

இனி, நாடகக் கலையோடு தொடர்பு அதிகம் இல்லாது போனாலும் வாசிக்கும் பழக்கம் உள்ளவர்களுக்கு எனது அனுபவங்கள் நல்ல வாசிப்புச் சுவைக்குரியனவாக அமையலாம் என்றும் கருதுகிறேன்.

அதேவேளை, எம்மவர்களிற் சிலர் தமது முயற்சிகளின் பயன்களே சிறந்தவை என்னும் பெருமிதத்தில் மற்றவர்களின் உழைப்புக்களுக்கு உரிய மதிப்புக் கொடுக்காத இயல்பினராய் இருத்தலையும் அறிவேன்.

பயன் காண விழைவோர் பயன் காண்பர். அது காண மனம் இல்லார் காணார். எனினும் உண்மையான நாடகப் பற்றாளருக்கும் வாசிப்புச் சுவைஞருக்கும் இந்நூலில் நிறையவே விருந்து வைத்திருக்கிறேன்.

சுவைப்பதைச் சுவைக்கலாம். கசப்பதைத் தவிர்க்கலாம்.

எனது அநுபவங்களை 'விளம்பரம்' பத்திரிகை வாசகருடன் பகிர்ந்து கொள்ளத் துணிந்த ஆசிரியர், திரு. இராஜா மகேந்திரன் அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

- அநுபவங்கள் தொடரும்.



கவிஞர் வி. கந்தவனம்




வீட்டில் முதலிட்டுச் சேமிக்கும் பணத்தை பல மடங்காகப் பெருக்கவும், பிள்ளைகளின் எதிர்காலத்தை வளமாக அமைக்கும் போதே உங்கள் ஓய்வு காலத்திற்காக ஒரு வீட்டினை இலகுவாகத் தேடிக் கொள்ளும் வழிகளை அறிந்து வாழ்க்கையில் வெற்றி பெற அழையுங்கள்.

பரம்ஜி - 416.230.1107

PARAM GNANASWARAN
Associate Broker
HOME LIFE GTA REALTY INC. Real estate Brokers
Office East: 1711 McCowan Rd., Suite 206, Scarborough, ON
416.321.6969
Office West: 145 Traders Blvd., Suite 28, Mississuga, ON
905.712.2666
paramg@gmail.com

# உலக கிண்ணம் 2006 - வெல்லப்போவது யார்?

# விளையாட்டுத் தகவல்கள் 190

சென்ற இதழில் உலக கிண்ண போட்டிகளின் வடிவமைப்பை பார்த்தோம். இவ்விதழில் மேலும் சில உலககிண்ண போட்டிகளுடன் சம்பந்தப்பட்ட சில சுவாரஸ்சியமான மேலதிக தகவல்களை பார்ப்போம்.

## கறுப்பு முத்து - பீலே

ஒவ்வொரு துறையிலும் காலத்தால் அழியாத பெருமையையும், புகழையும் வெகு சிலரால் மட்டுமே அடையமுடிகிறது. சாதாரண மனிதர்கள், தங்கள் துறைகளில் பதிக்கிற ஆழமான தடம்தான் அவர்களை சரித்திரமாக உயர்த்துகிறது.




கால்பந்தாட்டத் துறையில் சாமானியமாகப் பிறந்து தனது சலிப்பில்லாத உழைப்பால் சரித்திரமாக உயர்ந்தவர்தான் கால்பந்தாட்ட ரசிகர்களால் “கறுப்பு முத்து” என்றழைக்கப்படும் பீலே.

நாலு உலகக் கோப்பை போட்டிகளில் பங்கேற்றுள்ள இந்த பிரேசில் வீரர் 1940 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பிறந்தார். சிறுவயது முதலே கால்பந்தாட்டத்தில் ஆர்வம் கொண்டவராய் இருந்த பீலே இந்த நூற்றாண்டின் ஈடுஇணையற்ற சிறந்த கால்பந்துவீரர் என்று எல்லோராலும் பாராட்டப்பட்டவர்.

இவர் 1958, 1962 மற்றும் 1970ஆம் ஆண்டுகளில் நடந்த உலகக்கோப்பை போட்டிகளில் பிரேசில் பெற்ற வெற்றிகளில் “கதாநாயகன்” பாத்திரம் ஏற்றவர் என்றால் அது மிகையில்லை.

1956ஆம் ஆண்டு தனது 15வது வயதில் “சான்டோஸ்” கிளப்புக்காக விளையாடிய பீலேவை, தேர்வாளர்கள் உடனே தேசிய அணிக்குத் தேர்ந்தெடுத்தார்கள். ஆர்ஜென்டீனாவுக்கு எதிராக விளையாடியதே அவரின் முதல்போட்டி. அதில் பளிச்சிட்ட திறமையே 1958ஆம் ஆண்டு அவருக்கு சுவீடனில் நடைபெற்ற உலகக் கோப்பை போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பை பெற்றுத் தந்தது. ஆனால் அவரது தேர்வு பிரேசில் மக்களிடையே பெரும் சர்ச்சையை கிளப்பியது. உலகக் கோப்பை போட்டிகளில் பங்கேற்கும் அளவுக்கு தகுதியான வீரரா இந்த 17வயது இளைஞன்? என்பதே பலரின் கேள்வி.ஆனால் துரதிஷ்டவசமாக முழங்காலில் ஏற்பட்ட காயம் காரணமாக பீலேவால் 2 போட்டிகளில் விளையாட முடியவில்லை. ரஷியாவுக்கெதிரான மூன்றாவது போட்டியிலும் அணியின் உடல் தகுதி நிபுணரின் ஆலோசனையின் பேரில் பயிற்சியாளர் பீலேவை ஆட அனுமதிக்கவில்லை. ஆனால் இம்முறை பீலேவின் பக்கம் அதிஷ்டம் நின்றது. ஏதோ ஒரு காரணத்திற்காக ரஷியாவுடன் விளையாட பீலே அனுமதிக்கப்பட 2 - 0 கோல் கணக்கில் ரஷியாவை வீழ்த்தியது பிரேசில். அந்த ஆட்டத்தில் தனது முழுத்திறமையை வெளிப்படுத்திய பீலே, அணியின் தவிர்க்க முடியாத வீரரானார். பதினேழு வயதில் தனது நாட்டிற்காக உலகக் கோப்பையை வென்ற முதல் வீரரானார். ஆனால், 1962ஆம் ஆண்டு உலகக்கோப்பை போட்டி அவருக்கு சோதனைகள் நிறைந்ததாக இருந்தது. கடுமையான காயம் காரணமாக அவரால் விளையாட முடியவில்லை. ரசிகர்களுக்கு ஏமாற்றம்.

1966 உலகக்கோப்பை போட்டியில் செக்கோஸ்லேவேகியா மற்றும் உருகுவே அணிகளுடன் பீலே வெளிப்படுத்திய ஆட்டம், கால்பந்தாட்ட வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டியவை.

சர்வதேச போட்டிகளிலிருந்து 1971ஆம் ஆண்டு ஓய்வு பெற்றார். மரக்கானா ஸ்ரேடியத்தில் ஒரு இலட்சத்து எண்பதினாயிரம் ரசிகர்கள் கண்ணீர் மல்க அவருக்கு விடை கொடுத்தனுப்பியது மறக்க முடியதா உருக்கமான காட்சி. “நான் பார்த்தவரை கால்பந்தாட்ட நுணுக்கம் அனைத்தும் கற்றுத் தேர்ந்த ஒரு முழுமையான வீரர் பீலே” என்று தெரிவித்துள்ளார் இங்கிலாந்தின் பாபி மூர். பீலே விளையாடிய காலம், கால்பந்து விளையாட்டின் பொற்காலம்.

## 2. அங்கோலா

அடுத்தமாதம் ஜேர்மனியில் ஜொலிக்க உள்ள உலகக்கோப்பை கால்பந்து திருவிழாவில் பெரியதும், சிறியதுமாக 32 நாடுகள் பங்கேற்க உள்ளன.

சிறிய நாடாக இருந்தாலும் கால்பந்தாட்டத்தில் வெற்றிக் கொடி நாட்டிய நாடுகள் பல உண்டு. கடுமையான பயிற்சி, சிறந்த வீரர்கள் மற்றும் அனுபவம் மிகுந்த பயிற்சியாளர் ஆகிய காரணிகள், பரப்பளவு மற்றும் பொருளாதார ரீதியில் சிறிதாக உள்ள நாடுகளைக் கூட வெற்றி பெற வைத்துள்ளன.

ஆபிரக்க கண்டத்தில் உள்ள சிறிய நாடு அங்கோலா. நிறைய கனவுகளோடும் அதே சமயம் நம்பிக்கையோடும் அந்த அணி இம்முறை உலகக்கோப்பை போட்டியில் களமிறங்கும் வாய்ப்பை பெற்றுள்ளது. அக்வா, 29வயது நிரம்பிய இந்த கால்பந்து புயல் 2006 ஆபிரிக்க கோப்பை போட்டிக்குப் பிறகு பழைய தெம்புடனும் புதிய உற்சாகத்துடனும் அங்கோலா அணிக்கு தலைமை ஏற்கிறார்.

பென்பிஃகா கிளப்பின் முன்னாள் வீரரான இந்த அக்வா, சமீபத்தில், கோசபா கேசல் கோப்பை போட்டியில் ‘ஹாட்ரிக்’ அடித்து மொரீசியஸ் அணியைத் தோற்கடித்தார். இவ்வெற்றி அக்வாவின் சாதனை பயணத்தில் ஒருமைல் கல். கத்தாரைச் சேர்ந்த ‘அல்வக்ரா’ கிளப்பிலிருந்து ஒப்பந்தத்தை விலக்கிக் கொண்ட அக்வா, தற்போது புகழ்பெற்ற லுவாண்டா கிளப்பில் பயிற்சி பெற்று, தனது திறமையை மெருகேற்றி வருகிறார்.

“ஆபிரிக்க கோப்பை போட்டியில் அக்வாவின் ஹாட்ரிக் சாதனை, போட்டியை வெல்லக் காரணமாக அமைந்ததுடன், அச் சிறப்பு உலகக் கோப்பை போட்டிக்கு அவரை உடல் ரீதியாகவும் மனரீதியாகவும் தயார்படுத்தி உள்ளது” என்று அங்கோலா அணியின் பயிற்சியாளர் லூயிஸ் ஒலிவீரா கொன்சால்வஸ் தெரிவித்துள்ளார். எகிப்தில் நடைபெற்ற போட்டியில் அக்வா சிறப்பாக விளையாடவில்லை என்றாலும் அவரின் தலைமை அங்கோலாவுக்கு புது நம்பிக்கையாக உள்ளது. சர்வதேசப் போட்டியில் ஹாட்ரிக் சாதனையையும் சேர்த்து 35 கோல்கள் அடித்துள்ள அக்வா 2005க்கான அங்கோலாவின் சிறந்த விளையாட்டு வீரராகத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சமீபத்தில் தென் மண்டல ஆபிரிக்க கோப்பை போட்டியில் மொரீசியஸ் மற்றும் லெசோதோவுடன் அங்கோலாவுக்கு ஏற்பட்ட வெற்றி அணியை உற்சாகத்தில் ஆழ்த்தியுள்ளது.

“உலகக் கோப்பை போட்டியில் பல பெரிய அணிகளை எதிர்த்து அங்கோலா களமிறங்க உள்ளது. புதிய இளம் வீரர்கள் எங்களுக்கு அதற்கான நம்பிக்கையை ஏற்படுத்தி வருகின்றனர்” என்று பயிற்சியாளர் கொன்சால்வஸ் தெரிவித்துள்ளார். அங்கோலா அணி சாதிக்குமா, சறுக்குமா என்பது உலகக் கோப்பை போட்டியின்போது தெரிந்து விடும்.

## தென்கொரியா

உலகக்கோப்பை கால்பந்துப் போட்டியில் உலகை அதிர்ச்சியுறச் செய்யும் விதமான அணியைக் களமிறக்க தென்கொரிய அணியின் பயிற்சியாளர் டிக் அட்வாகாட் திட்டம் வகுத்துள்ளார். கடந்த முறை நடைபெற்ற உலகக் கோப்பை போட்டியில் அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறியது தென்கொரியா. அந்த முன்னேற்றத்தை அங்கீகரிக்கக் கூடிய அணியைக் களமிறக்குவதில், பயிற்சியாளர் அட்வாகாட் மட்டுமல்லாது தென்கொரிய அணி நிர்வாகமும் தீவிரம் காட்டியுள்ளது.

உலகக்கோப்பை போட்டியில் பங்கேற்கும் தென்கொரிய அணி, சியோலில் வியாழக்கிழமை அறிவிக்கப்பட்டது. அணியில், இதற்கு முன்பு உலகக்கோப்பை போட்டிகளில் விளையாடிய 10வீரர்கள் இடம் பெற்றுள்ளன. 13பேர் முதன் முதலாக உலகக் கோப்பை போட்டியில் விளையாட உள்ளனர்.

இங்கிலாந்தில் உள்ள மான்செஸ்டர் யுனைட்டெட் அணிக்காக ஆடிவரும் பார்க் ஜி-சங், டாட்டடன்ஹாம் அணியில் விளையாடிவரும் லீ யங்-பியோ ஆகியோர் 23பேர் கொண்ட அணியில் முக்கிய வீரர்களாகத் திகழ்கின்றனர். பெரும்பாலான வீரர்கள் ஐரோப்பாவை சார்ந்த தென்கொரிய வீரர்களாக உள்ளனர்.

அணியில் உள்ள மூத்த வீரரான ஆன் ஜூங் ஹவான், முன்களத்தில் அணியைத் தோளில் சுமக்கும் முக்கிய வீரராக இடம்பெற்றுள்ளார். 30 வயதாகும் அவர், ஜெர்மனியில் உள்ள டூயிஸ்பர்க் அணிக்காக ஆடிவருவது குறிப்பிடத்தக்கது. கடந்த உலகக் கோப்பை போட்டியில் ஆன் அடித்த கோல்டன் கோலால், புகழ் பெற்ற இத்தாலி அணி 2ஆம் சுற்றுடன் வெளியேறியது குறிப்பிடத்தக்கது. சியால் கி ஹியூன், சோ ஜே ஜின், சுங் கியூங் ஹோ, லீ சுன் சூ, பார்க் சு யங் ஆகியோரும் முன்களத்தில் நாட்டுக்கு புகழ் சேர்க்க உள்ளனர்.

“மிகவும் சமபலம் வாய்ந்த அணி இம்முறை களமிறங்க உள்ளது. உலக ரசிகர்களுக்கு அவர்கள் அதிர்ச்சியளிக்கும் விதமான ஆட்டத்தை வெளிப்படுத்துவர்” என அட்வாகாட் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். இவர் ஹாலந்தில் பிறந்தவர்.

நீண்ட இடைவெளிக்குப் பிறகு அணியில் இடம்பிடித்துள்ள சாங் சோங் கக், நீண்ட காலத்துக்குப் பிறகு விளையாட உள்ளது குறிப்பிடத்தக்கது. உள்ளூரில் உள்ள சுவோன் சாம்சங் அணிக்காக ஆடிவரும் கக், அணியில் இடம்பெற்றது ரசிகர்களுக்கு வியப்பை ஏற்படுத்தியுள்ளது. காரணம், அட்வாகாட் கடந்த செப்ரெம்பரில் பயிற்சியாளராகப் பொறுப்பேற்றது முதல் தேசிய அணியில்கூட அவர் சேர்க்கப்படவில்லை. 27வயதாகும் சோங்-கக், கடந்த உலகக்கோப்பை போட்டியிலும் பங்கேற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. கடந்த முறை ஜப்பானுடன் இணைந்து உலகக் கோப்பை போட்டியை நடத்தியது தென்கொரியா. அப்போது, போர்த்துக்கல், இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளைத் தோற்கடித்து அரையிறுதிச் சுற்றுக்கு முன்னேறியது குறிப்பிடத்தக்கது.

**எஸ். கணேஷ்**

## பாவம் ஜெயசூரியா!!

சர்வதேச துடுப்பாட்டப் போட்டியிலிருந்து இலங்கை அணியின் முன்னாள் அணித்தலைவர் சனத் ஜெயசூரியா தானாக ஓய்வு பெறவில்லை. அம்முடிவை மேற்கொள்ள அவர் நிர்பந்திக்கப்பட்டார் என முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் அசந்தா டி மெல் தெரிவித்துள்ளார். இலங்கை அணியின் தேர்வுக் குழுத் தலைவராக கடந்த வாரம் பதவியேற்ற டி மெல், அப்பதவியில் முன்பு இருந்த லலித் கலுபெருமா பற்றி அதிருப்தி தெரிவித்துள்ளார்.

## டி மெல் கூறியது

36 வயதாகும் ஜயசூரியா இலங்கை அணிக்காக பல்வேறு சிறப்புக்களைச் சேர்த்தவர். அவரை முன்னாள் தேர்வுக்குழுத் தலைவர் நடத்திய விதம் வித்தியாசமாக இருந்தது. ரெஸ்ற் போட்டியிலிருந்து ஓய்வு பெறுவதாக அறிவிக்கவில்லையென்றால் அணியிலிருந்து நீக்க வேண்டிவரும் என ஜயசூரியாவை நிர்ப்பந்தித்தார். இதையடுத்தே, அவர் ஓய்வு பெறுவதாக அறிவித்தார்.

பொதுவாக, ஜயசூரியா போன்ற மூத்த வீரர்களை உரிய மரியாதையுடன் நிர்வாகிகள் நடத்த வேண்டும். திடீரென ஒரு கூட்டத்துக்கு அவரை அழைத்து இம்மாதிரி நிர்ப்பந்திப்பது நல்லதல்ல. அதையடுத்தே, ஒருதினப் போட்டிகளில் கவனம் செலுத்துவதற்காக இம்முடிவை மேற்கொண்டதாக ஜயசூரியா தெரிவித்தார் என்றார் டி மெல்.

ஒரு தலைசிறந்த துடுப்பாட்ட வீரர் ஆன சிங்கள மகன் ஜயசூரியாவிற்கே இந்த கதி என்றால் இனி வருங்காலத்தில் தமிழ்மகன் முத்தையா முரளிதரன் ஒழுங்காக பந்து வீசவில்லை என்றால் கதி என்னவாகுமோ??!






# Condo. வாழ்க்கை

கனடாவின் முக்கிய நகரங்களின் அடுக்கு மாடிக்கட்டிடங்களின் விலை ஒப்பீட்டளவில் அதிகரிக்கின்றது. வசதி ஒரு காரணமாக இருக்குமா என்ற கேள்வி, இதற்கு காரணமாக இருக்குமா? இதனைவிட Location, மற்றும் சமாளிக்க கூடிய விலை போன்றவற்றை முக்கிய காரணமாகக் கொள்ளப்படுகின்றது. அல்பேட்டா மாகாணத்தில் உள்ள Calgary நகரத்தின் வீட்டின் விலை இந்த வருடத்தில் 30% அளவில் அதிகரித்துள்ளது. வன்கூவர் நகரிலும் வீட்டின் விலையில் அதிகரிப்பைக் காணக்கூடியதாக உள்ளது.

இதுபோன்ற அதிகரிகப்பால் சாதாரண மக்களின் அடமானத்திற்குரிய கொடுப்பனவு கட்டுக்கடங்காமல் போவதால் வேறுவழியை நாட வேண்டி இருக்கின்றது. இதன் காரணமாகவும் Condo. களின் விலை அதிகரிப்பு ஏற்படலாம். இதனால், இந்த ஆண்டின் முதல் காலாண்டு பகுதியில் Condo. மற்றும் Town House போன்றவற்றின் விலை கனடாவின் முக்கிய நகரங்களில் விலை 10%இற்கு மேலாக அதிகரித்துள்ளது. Professionals, மற்றும் பல்கலைக்கழக பட்டதாரிகள் பொதுவாக Condo. களையே விரும்புகின்றார்கள். இதனால் ரொறொன்ரோ போன்ற நகரங்களில் உள்ள Condo. களின் விலை அதிகரித்தே செல்கின்றது.

Toronto - Downtown இல் உள்ள Acivities, வசதிகள் போன்றவற்றையும் இதற்குரிய காரணங்களாகும். ரொறொன்ரோ மத்திய பகுதியில் வாழ விரும்பும் இவர்களிற்கு வாகனங்களின் தேவையும் தவிர்க்கப்படுகின்றது. இதனால் அண்மைக்காலங்களில் ரொறொன்ரோப் பகுதியில் Condo. வாங்கிய பலர் வயதில் குறைந்தவர்களாக இருப்பதையும் அவதானிக்கலாம்.

மேலும் முதலீடு செய்பவர்களும் ரொறொன்ரோவை விரும்புகிறார்கள். வெளிநாடுகளின் விலையுடன் ஒப்பிடும்போது ரொறொன்ரோவின் விலை இன்னும் குறைவாக இருப்பதை காணலாம்.

புதிதாக நாட்டிற்குள் வருபவர்களின் வசதிகளிற்கேற்ப ரொறொன்ரோவில் வாழவிரும்புவர்களிற்கு வீடுகளில் முதலிடுவது கடினமாக இருப்பதால் Condo. ஐ நாடுகின்றார்கள். ரொறொன்ரோவில் விற்கப்பட்ட வீடுகளில் 20% Condo. களாகவே காணப்படுகின்றது.

ஆனால் கடந்த "Boom" காலத்தில் (1988/89) இந்த அளவு 15% ஆகக் காணப்பட்டது. புதிய தனி வீடுகளின் விற்பனையில் சரிவு அண்மையில் CMHC (Canda Mortgage and Housing Corporation) இன் அறிக்கையின்படி ஏப்ரல் மாதத்தில் விற்கப்பட்ட புதிய வீடுகளின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

ரொறொன்ரோ பகுதியில் ஏப்ரல் மாதத்தில் தனினவீடுகளின் எண்ணிக்கை 20% குறைந்து, Town Houses 6% அதிகரித்தும், Condo. களின் 15% அதிகரித்தும் காணப்படுகின்றது. மேலும் மார்ச், ஏப்ரல் மாதங்களில் வீட்டின் சராசரி விலையில் அதிகரிப்பே காணப்பட்டுள்ளது. மார்ச் மாதத்தில் ரொறொன்ரோ இன் சராசரி வீட்டின் விலை $342,032 ஆகக் காணப்பட்டது.

ஏப்ரல் மாதத்தில் இந்த தொகை $366,683 ஆக அதிகரித்துள்ளது. இதனாலும் முதல்தடவை வீடு வாங்குபவர்கள் Condo., Town house வாங்கின்றார்கள். தொடர்ச்சியான வட்டிவீத அதிகரிப்பு வருட கடைசியில் வீடு வாங்குபவர்களின் எண்ணிக்கையில் இறக்கத்தை ஏற்படுத்தலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது. இதனாலே TD வங்கியின் Report உம் உறுதிப்படுத்தியுள்ளது.

கனடிய வட்டிவீதம் கடந்த சில காலம் தொடர்ந்து அதிகரித்து வருகின்றது. கனடிய மத்தியவங்கியின் ஆளுனரின் கூற்றுப்படி "கனடிய

## நாமும் நமது இல்லமும்

ராஜா மகேந்திரன்

தொடர்-228

பொருளாதாரத்தின் ஸ்திரநிலை, கனடிய நாணயத்தின் உறுதிநிலை போன்றவற்றினால் கனடிய வட்டிவீதத்தில் மேலும் அதிகரிப்பு தேவைப்படலாம்" என்று கூறுகின்றார்கள். இதனால் இம்மாதம் 24ஆம் திகதியும் (மே 24, 2006) மேலும் 1/4% வட்டி அதிகரிப்பை எதிர்பார்க்கலாம்.

(இன்றைய முதன்மை வட்டிவீதம் 5.75% மற்றும் மத்திய வங்கியின் வட்டிவீதம் 4% ஆகும்)

2006 இல் விற்கப்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை

| மாதம் | விற்ற வீடுகளின் எண்ணிக்கை | சராசரி விலை |
|---|---|---|
| ஜனவரி | 4,587 | $332,687 |
| பெப்ரவரி | 6,756 | $353,928 |
| மார்ச் | 8,707 | $353,134 |
| ஏப்ரல் | 8,361 | $366,683 |






# அர்த்தமற்ற “சும்மா” மிகவும் அர்த்தமுள்ளது

**நா. க. சிவராமலிங்கம்**

சும்மா என்ற வார்த்தை கட்டுக்கடங்காத பொருட்செறிவுடையது. சந்தர்ப்பத்திற்கு ஏற்ப நிறம் மாறும் தன்மையது. தொடர்வண்டியில் பிரயாணம் செய்யும் போது “ஐயா ரெம்பத் தூரமா?” என்று வினவுகின்றோம். சும்மா போகின்றோம் என்று பக்கத்திலிருப்பவர் பதிலிறுக்கும் போது நமக்கு அர்த்தமானது போல திருப்பியடைகின்றோம். என்ன வேலை பார்க்கின்றீர்கள் என்ற அடுத்த வினாவிற்கும் சும்மா இருக்கின்றேன் என்று பதில் வருகின்றது. இந்தப் பதில்களுக்கெல்லாம் மசிந்து கொடுப்பவர்களா? நாம். உங்களுக்கு கலியாணமாகிவிட்டதா? என்ற அடுத்த வினாவைத் தொடர்கின்றோம். வரம்பு மீறி விட்டதா எண்ணி “சும்மா இரு ஐயா” என்று அதட்டுகின்றார் அவர். சம்பாசனையில் வார்த்தைக்கு பஞ்சம் ஏற்படும் போது சும்மா என்ற சொல்லை தாராளமாகப் பயன்படுத்துகின்றோம். ஓட்டைப்பலகைக்கு சக்கை வைத்து அடித்து சரிப்படுத்துவது போல கருத்திலே முடக்கம் ஏற்படும் போது சும்மா என்ற ஆப்பை அடித்து சரிப்படுத்திக் கொள்கின்றோம்.

மொழியை துல்லியமாகவும், நுட்பமாகவும் கையாளத் தெரியாத சோம்பேறிகள் மாத்திரமல்ல. சொல்லிறந்து நிற்கும் எல்லையில்லாத இன்பத்தைத் கண்ட ஞானிகள் கூட சும்மாவில் இருக்கும் சுகத்தைப் பாராட்டுகின்றார்கள். சும்மா என்பது வெறும் சக்கை வார்த்தை என்றல்லவா நினைத்தோம். அது அப்படியல்ல. மனித மொழியின் எல்லையைத் தாண்டி பரமார்த்தத்தின் இதயத்தில் நின்று விளையாடுகின்ற வார்த்தை ஒன்று உண்டென்றால் அது சும்மா என்ற வார்த்தை தான் என்கின்றார் அருணகிரி நாதர்.

செம்மான் மகளைத் திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா! பொருள் ஒன்றும் அறிந்திலனே.

சும்மா என்பது சுகமா என்ற வார்த்தையில் இருந்து தோன்றி இருக்க வேண்டும் என்று சிலர் சொல்லுவதுண்டு. ‘சும்மா’ வின் அகண்ட அர்த்தபரிபூரணத்தை இப்படியெல்லாம் விலங்கு போட்டு வில்லங்கப்படுத்திவிட முடியாது. எனவே ‘சும்மா’வின் பிறப்பை நினைக்க நினைக்க அம்மா என்று அருணகிரிநாதரைப்போல கைவிரிக்க வேண்டியது தான். ஏனெனில் அவ்வளவு அர்த்தத்திற்குரிய பதம் அது.



சீதையைத் தேடி மாளிகைக்கு மாளிகை தாவிக் கொண்டு போகின்றான் அனுமன். எங்கு பார்த்தாலும் மதியை முட்டி நிற்கும் மாடங்கள் ஒவ்வொன்றும் கோமேதகத்தாலும் வைரத்தாலும் வைடுரியத்தாலும் கட்டப்பட்டதாகும். நீல மாளிகைமீது தாவியதும் அனுமனது மேனி நீலமயமாகவும் பொன்மாளிகைமீது தாவியதும் பொன்மயமாகவும் மாறி விடுகின்றது. இதனை பார்த்து அதிசயித்த கம்பர் பின்வருமாறு பாடுகின்றார்.

கரியனாய் வெளியானகிச் செய்யனாய்
காட்டும் காண்டர்க்கு
அரியனாய் எளியனாய் தன்
அகத்துறை அழகனே போல்

இவ்வாறு தன்னைச் சுற்றியிருக்கும் சமயசந்தர்ப்பங்களைப் பொறுத்து அர்த்தபேதங்களைப் பெற்று ஒளிவீசுகிறது சும்மா என்னும் மணி வார்த்தை. பேச்சு மொழியினர் கூட தமிழிலே இருக்கும் சும்மாவைப்போல தொய்வும் விரிவும் வேகமும் ஆழமும் சந்தர்ப்ப சுகமும் உள்ள வார்த்தை வேறு எம்மொழியிலும் இல்லை என்பர்.




# S M I L E

- BUSINESS PLANS
- CORPORATE TAX PREPARATION OF FILING
- PROFESSIONAL OVER 15 YEARS EXPERIENCE
- ACCOUNTING, TAXATION
- SYSTEMS - POINT OF SALES

RK CONSULTANTS


**PL. CALL: 905.887.7457 / 905.751.7537**

24 hrs, 365 days

# ஞானம்ஸ் ஸ்ருடியோ

1 Hour Photo Lab: 3 x 5 & 8 x 12

Professional Photographer - கதிர்- 416-750-8118



2381 Eglinton Ave., E.,
Kennedy / Eglinton, Scarborough

18 வருடங்களாக தமிழர் மத்தியில் நன்மதிப்பைப் பெற்ற

# யோகாஸ்


## குறுக்கு எழுத்துப் போட்டி இல. 174

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | 3 | | 4 |
| | | | 5 | | | | |
| 6 | | | | | | | |
| | 7 | | 8 | | | | |
| | | | | | | | |
| | | | 9 | | 10 | | 11 |
| | | | | | | | |
| 12 | | | | | 13 | | |

**இட - வல**

1. மலை
4. நாடகம் (வல-இட)
5. வெட்டு (வல - இட)
6. ஒரே ஒரு பூ பூக்கும் மரம்
7. மாலை (வல-இட)
8. யானை பாகனின் ஆயுதம்
9. சனத்திரள் (வல-இட)
10. நீர்
12. அழை
13. இரகசியம்

**மேல் - கீழ்**

1. தேவாரம் பாடுபவர்
2. பெண் ஆடு
3. மினுக்கு
4. சீலையால் கட்டப்பட்ட தற்காலிக வீடு
7. ஒருவகை செடி (கீழ்-மேல்)
9. இணை
10. அளவு
11. ஓர் உணவு
12. தானியம் (கீழ்-மேல்)

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| வே | லை | நி | று | த் | த | ம் | |
| ண் | | ர | | | ண் | ர | அ |
| டு | ட் | ப | | ல் | ட | ம | |
| கோ | | ரா | | | லை | | மு |
| ள் | ர | தி | | ரி | | | ழு |
| | | | ம் | க | க் | ண | வ |
| ய் | தா | | ண | | | | து |
| வே | ய் | ங் | கு | ழ | ல் | | ம் |

சரியான விடைகளில் இருவர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படுவர். இவர்களுக்கு "யோகாஸ்" இல் பாவிக்கக் கூடிய $15, $10 Gift Certificates வழங்கப்படும். இதற்கு cash value கிடையாது. விடைகள் May 29, 2006க்கு முன்னர் விளம்பரம் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

**173இல் வெற்றி பெற்றோர்**

1) M. Suthagar, Toronto
2) S. Rajaratnam, Etobicoke


- ஆட்டிறைச்சி வியாபாரத்தில் தமிழ் மக்களின் உள்ளங்களை வென்றவர்!
- அன்றாட சந்தையில் மரக்கறி, மீன் வகைகளை தினமும் தருவித்துக் கொடுப்பவர்கள்.
- வாடிக்கையாளர்களின் தொகையில் உயர்ந்தவர்!

**(416) 267-0408** 731 - 733 Kennedy Road [Ken-Mark Plaza]


அன்புக்குரிய வாசகர்களுக்கு!

முத்துராஜாவின் 60 கவிதைகள் அடங்கிய “சுனாமி” எனும் கவிதைத் தொகுப்பு விரைவில் உங்களுக்குக் கிடைக்க உள்ளது என்பதை அறியத் தருகின்றேன்.

# ஒளி

பூத்துக் குலுங்கிச் சொரிகின்றன
புழகாங்கிதச் சிரிப்பொலிகள்
சொர்க்கத்தீவின் தோளில் ஏறித்
துள்ளிக் குதிக்கின்றாள் மகாவலிக் குமரி

தெம்மாங்குக் கொழுந்தின் இசையில்
தேயிலைக் கூடை தாலாட்டுப் பாடுகின்றது
கருஞ்செந்நிற அட்டைகளுக்கு உணவூட்டும்
வியர்த்த உடலில் தொங்கும் ஏணைக்குள்
அசைந்து உறங்குகின்றன இறப்பர் சிசுக்கள்

சாமுத்திரிகாக் கன்னிகளின் குதூகலக் கும்மாளம்
கட்டித் தழுவும் குத்துக்கரணச் சுழியில்
சுருண்டோடுகின்றன முகட்டில் வழியும் ஊற்றுக்கள்

குருதியும் சேறும் மரம் உரசிய தோலுடன்
உழைத்துக் களைத்து உடல் சரிந்து நீராடும்
கருமலைக் குன்றுகள்
உறிஞ்சிப் பொழிகின்றன வெள்ளி வாணங்கள்

என் இரத்தச் சுற்றில் இரண்டற இணையும்
நறுமணக் குளிர்ச்சியுடன், ஏறிய படி உச்சியில்
காட்சிதருகின்றது ஓர் விசால உலகம்

அங்கே வெண் பஞ்சுப் புடவைகளில்
வலம்வரும் கருமுகிலின் சிவந்த விரல்கள்



ஏந்திய தட்டுக்களை நிறைத்திருக்கும்
குளிர்தாமரை இதழ்களின் பூசை ஒலிகள்

புன்னகைப் பூக்கள் தினமும் சொரிகின்றன
அன்புப் பாதங்கள் அவற்றை
ஏந்திக் கொள்கின்றன.



**முத்துராஜா**

# தமிழ் சினிமா இயக்குநர்களுக்கு காதலைத் தவிர மக்களிடம் சொல்லவதுக்கு வேறு பிரச்சினைகளே இல்லை

நேர் காணல்:ஒளிப்பதிவாளர், இயக்குநர் விஜய் மில்டன்

ஒளிப்பதிவாளராக அறிமுகமாகி பின்பு இயக்குநராக ஆனவர்களுக்கு தமிழ் சினிமா வரலாற்றில் பல உதாரணங்கள் உண்டு. பாலுமகேந்திரா, பி.ஸி. சிரிராம், ஜீவா, சந்தோஸ் சிவன், தங்கர்பச்சான் கியோர் இவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள். இந்த வரிசையில் புதியதாக இணைந்திருப்பவர் ஒளிப்பதிவாளர் விஜய் மில்டன். சமீபத்தில் வெளியாகி வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் "அழகாக இருக்கிறாய் பயமாக இருக்கிறது" திரைப்படத்தின் மூலமாக இயக்குநராக அவதாரம் எடுத்திருக்கிறார் ஒளிப்பதிவாளர் விஜய் மில்டன்.

"ப்ரியமுடன்", "ஹலோ", "ஓட்டோகிராஃப்", "காதல்" உட்பட இதுவரை பதினான்கு படங்களுக்கு மேல் ஒளிப்பதிவு செய்துள்ளார் விஜய் மில்டன். இவர் ஒரு கவிஞரும்கூட. இவரது கவிதைகள் தமிழ் சிறுபத்திரிகை இயக்கத்தைச் சேர்ந்த தீவிர விமர்சகர்களாலும் பாராட்டப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

"விளம்பரம்" இதழுக்காக விஜய் மில்டனை அவரது அலுவலகத்தில் சந்தித்தோம். தான் ஒளிப்பதிவு செய்துள்ள திரைப்படங்கள் குறித்தும், புதியதாக இயக்கியுள்ள "அழகாக இருக்கிறாய் பயமாக இருக்கிறது" படம் குறித்தும் விரிவாக நம்முடன் பேசினார் அவர்.

கேள்வி: தமிழ் சினிமா வரலாற்றில் ஒளிப்பதிவாளராக இருந்து இயக்குநராக அவதாரம் எடுத்தவர்கள் பலர். ஆனால், பாலுமகேந்திரா போன்ற ஒரு சிலர் தவிர்த்து, அவர்களில் பலர் தொடர்ந்து இயக்குநர்களாக நீடிக்கவில்லை. மிக சமீபத்தில் இயக்குநராக அவதாரம் எடுத்த ஒளிப்பதிவாளர் என்ற அடிப்படையில் கேட்கிறோம், இதற்கு என்ன காரணம்?

விஜய் மில்டன்: தமிழ் சினிமாவிற்குள் ஒருவர் தொடர்ந்து படம் பண்ணுவது என்பது, அவர் தொடர்ந்து வெற்றிப் படங்களைக் கொடுக்கும் போதுதான் சாத்தியம். நடிகைகள், நடிகர்கள், இயக்குநர்கள், ஒளிப்பதிவாளர்கள், இசை அமைப்பாளர்கள் உட்பட எல்லோருக்கும் இதுதான் நிலை. இயக்குநராகும் ஒளிப்பதிவாளர் தொடர்ந்து இயக்குநராக நீடிக்க வேண்டும் என்றாலும் சரி அல்லது தொடர்ந்து ஒளிப்பதிவாளராகவே நீடிக்க வேண்டும் என்றாலும் சரி, அது அவர் கொடுக்கும் வெற்றிப் படங்களைப் பொறுத்ததுதான். இது தவிர்க்க முடியாதது.

கேள்வி: "அழகாக இருக்கிறாய் பயமாக இருக்கிறது" திரைப்படத்தின் கதை பின்நவீனத்துவ கதைசொல்லல் முறையில் அமைந்திருக்கிறது. இது தமிழ் சினிமா ரசிகர்களுக்கு புதியது. அவர்கள் நேர்கோட்டில், விவரமாகவும் விளக்கமாகவும் கதையை நகர்த்தும் சினிமாவை பார்த்து பழக்கப்பட்டவர்கள். அவர்கள் உங்கள் திரைப்படத்தை எப்படி ஏற்றுக்கொண்டார்கள்?

விஜய் மில்டன்: தமிழ் சினிமா ரசிகர்களை ஒரே வகையானவர்களாக அளவிடும் போக்கு பொதுவாக நிலவுகிறது. இதன் அடிப்படையில்தான் நீங்கள் இப்படி கேட்கிறீர்கள். ஆனால் இதில் எனக்கு உடன்பாடில்லை. தமிழ் நாட்டிற்குள் எந்த இடத்திற்கும் போய், அந்த இடத்திலிருந்து நூறு கிலோமீட்டர் தூர சுற்று வட்டாரத்துக்குள் வாழும் மக்களின் ரசனையை மதிப்பிட்டீர்கள் என்றால், அவர்களின் ரசனை தன்மை பல்வேறு விதமானதாக இருப்பதை பார்க்க முடியும். நூறு கிலோமீட்டர் சுற்று வட்டாரத்துக்குள்ளேயே இவ்வளவு மாறுதல்கள்



இருக்கும் போது, மதுரை ரசிகர்களையும் கோயமுத்தூர் ரசிகர்களையும் எப்படி ஒரே ரசனையுள்ளவர்களாக மதிப்பிட முடியும். "அழகாக இருக்கிறாய் பயமாக இருக்கிறது" படத்தின் முன்பாதியை கோயமுத்தூர், சென்னைப் பகுதியை சேர்ந்த ரசிகர்கள், "நன்றாக இருக்கிறது" என்று பாராட்டினார்கள். ஆனால் மதுரை, திருநெல்வேலி பகுதியைச் சேர்ந்த திரைப்பட ரசிகர்கள் பின்பாதியைத்தான் "பிடித்திருக்கிறது" என்கிறார்கள். இவர்கள் இருவரையும் திருப்தி செய்யும் ஒருவரால்தான் தமிழ் சினிமாவில் தொடர்ந்து வெற்றிப் படங்களை கொடுக்க முடியும். இதுதான் இன்றைக்கும் தமிழ் சினிமா இயக்குநர்களுக்கு முன்னால் இருக்கும் பெரிய சவால். எப்படி வெவ்வேறு ரசனை கொண்ட ரசிகர்களை ஒரே திரைப்படத்தின் மூலம் திருப்தி படுத்துவது? இந்த படத்தில் கற்றுக்கொண்டவற்றின் அடிப்படையில் இந்த சவாலை அடுத்தப் படத்தில் கடந்துவிடுவேன் என்று நினைக்கிறேன்.

ஆனாலும் தமிழ் சினிமாவில் வழக்கமாக இடம்பெறும் வெற்றிச் சூத்திரங்களான தனியான நகைச்சுவை காட்சிகள், கவர்ச்சிக் காட்சிகள், மரத்தைச் சுற்றிப்பாடும் காதல் பாடல்கள், கதாநாயகன் துதிபாடல்கள், ஒருவன் பத்து பேரை அடித்துத் துவைக்கும் வீரசாகச சண்டைக் காட்சிகள் போன்ற கற்பனைக்கு மிகுதியான எந்த காட்சியும் என் படத்தில் இல்லை என்பதையும் உங்களுக்கு குறிப்பிட விரும்புகிறேன். இது எதுவும் இல்லாமலே என் படம் வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கிறது என்பது எனக்கு மிகப்பெரிய மகிழ்ச்சியையும் நம்பிக்கையையும் கொடுத்திருக்கிறது.

கேள்வி: எங்களுக்கும் முன்பாதி படம் மிகவும் பிடித்திருந்தது. முன்பாதியில் அவ்வளவு சிறப்பாக செய்திருக்கும் நீங்கள், அதே அளவு கவனத்தை பின்பாதியில் செலுத்தவில்லையோ என்று தோன்றியது. குறிப்பாக இறுதிக் காட்சிகள் மிக நீளமாக இருப்பதாக நினைக்கிறோம்.

விஜய் மில்டன்: முன்பாதி கதை பின்நவீனத்துவ கதை சொல்லல் முறையில் சொல்லப்பட்டிருக்கிறது. நீங்கள் குறிப்பிட்டது போலவே இது தமிழ் சினிமா ரசிகர்களுக்குப் புதியது. இப்பகுதியில் வழக்கமான தமிழ் சினிமா வரம்புகள் பலவற்றை நான் மீறியிருக்கிறேன். எனவே இது புதுமையை விரும்பும் எல்லோருக்கும் பிடித்திருக்கிறது. ஆனால் பின்பாதியில் அப்படியே கதையை நகர்த்தி செல்ல கதையில் எனக்கு இடமில்லை. பின்பாதியை இப்போது இருக்கும் முறையில் சொன்னால்தான் கதைக்கு ஒரு அழுத்தம் கிடைக்கும் என்று தோன்றியது. அதனால் அப்படிச் சொல்லியிருக்கிறேன். இதனால் முன்பாதியில் தமிழ் சினிமா வரம்புகள் பலவற்றை துணிச்சலாக மீறிய நான், பின்பாதியில் அதே வரம்புகளுக்கு வழிந்து சென்று உடன்பட்டிருக்கிறேன் என்பதையும் நான் மறுக்கவில்லை. தமிழ் சினிமாவிற்குள் புரையோடிப்போன விடயங்கள் பலவற்றை முதல் சினிமாவிலேயே மீற ஒருவருக்கு மிகப்பெரிய துணிச்சல் வேண்டும். மேலும் ஒரு சினிமாவால் அவற்றை மாற்றிவிடவும் முடியாது.

கேள்வி: "அழகாக இருக்கிறாய் பயமாக இருக்கிறது" படத்தில் கதாநாயகன் பரத்தின் தந்தையாக பிரகாஸ்ராஜ் புகைப்படம் ஓர் இடத்தில் காட்டப்படுகிறது. ஆனால் அவர் படத்தின் எப்பகுதியிலும் வரவில்லை. என்ன காரணம்?

விஜய் மில்டன்: பொதுவாக தமிழ் சினிமாவில் இறந்தவர்களின் புகைப்படங்களைக் காட்டும் போது ஒரு பிளாஸ்பேக் இடம்பெறும். இப்படத்தில் நான் உடைத்துள்ளதாக குறிப்பிட்ட தமிழ் சினிமா கட்டமைப்புகளுள் இதுவும் ஒன்று. படம் முழுக்க இதுபோன்ற சின்ன சின்ன ஆச்சரியங்கள் பலவற்றை ஒளித்து வைத்திருக்கிறேன். படத்தை இரண்டாவது மூன்றாவது முறையாகப் பார்ப்பவர்களுக்குத்தான் அது புரியும்.

கேள்வி: நீங்கள் அடிப்படையில் ஒரு கவிஞர். ஆனால் உங்கள் படத்தில் நீங்கள் ஒரு பாடல்கூட எழுதவில்லை. என்ன காரணம்?

விஜய் மில்டன்: கவிதை வேறு திரைப்பட பாடல்கள் வேறு. தமிழ் சினிமா பாடலாசிரியர்கள் அனைவரும் கவிஞராக இருந்து பாடலாசிரியர்கள் ஆனவர்கள்தான் என்றாலும், கவிதை எழுதத் தெரிந்த அனைவரும் பாடல் எழுதிவிட முடியாது என்பதுதான் என் புரிதல். கவிதை எழுதிய அனுபவமும் கவித்துவ உணர்வும் நல்ல பாடல் வரிகளை தேர்வு செய்வதுக்கு மட்டுமே உபயோகமாக இருக்கும்.

கேள்வி: "அழகாக இருக்கிறாய் பயமாக இருக்கிறது" படத்தில் நீங்கள் புதியதாக அறிமுகம் செய்துள்ள பாடலாசிரியர் ராஜுமுருகன் பற்றி?

விஜய் மில்டன்: ராஜுமுருகன் ஒரு பத்திரிகையாளர், நல்ல கவிஞர். அவரது கவிதைகள் எனக்கு மிகவும் பிடிக்கும். அவரை பயன்படுத்திக் கொள்ளலாம் என்று முடிவெடுத்தேன். இந்த படத்தில் இடம்பெற்றுள்ள, "கனவே கலைகிறது. . . என்ற பாடல்தான் அவர் எழுதிய முதல் பாடல். ஆனால் முதல் பாடலிலேயே ஒரு தேர்ந்த பாடலாசிரியருக்கு உரிய நுட்பத்துடன் அவர் எழுதினார். "கனவே கலைகிறது . . . பாடலில் வரும் "தரையில் மோதி மழைத்துளி சாகும்" என்ற வரி எனக்கு மிகவும் பிடித்திருந்தது. அதனால் அவரை மேலும் இரண்டு பாடல்களை எழுதச் சொன்னேன். அவர் ஒரு பாடலுக்கு 120 பக்க நோட்டு முழுவதும் பல்லவி, சரணம் எழுதிக் கொண்டு வருவார். அந்த ஆர்வம் என்னை மிகவும் நெகிழச் செய்தது, கவர்ந்தது. பின்னாளில் ராஜுமுருகன் மிகச் சிறந்த பாடலாசிரியராக வருவார் என்று உறுதியாக நம்புகிறேன்.

கேள்வி: இயக்குநராகி விட்டீர்கள். இனிமேல் யாராவது ஒளிப்பதிவு செய்ய அழைத்தால் ஒப்புக்கொள்வீர்களா?

விஜய் மில்டன்: நிச்சயமாக. நான் அடுத்ததாக ஒப்புக் கொண்டிருக்கும் படத்தில் ஒளிப்பதிவாளராக மட்டுமே பணியாற்றுகிறேன். ஒளிப்பதிவு செய்வது, இயக்குவது இரண்டுக்கும் இடையில் மிகப்பெரிய வித்தியாசம் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை. இயக்குநராக வேலை செய்யும் போது, அந்த திரைப்படத்தின் மீது எனக்கு இருக்கும் ஆர்வம்தான், ஒளிப்பதிவாளராக நான் பணியாற்றும் படங்கள் மீதும் எனக்கு இருக்கிறது.

கேள்வி: " தமிழ் சினிமா இயக்குநர்களுக்கு காதலைத் தவிர மக்களிடம் செல்வதுக்கு வேறு பிரச்னைகளே இல்லை" என்று இயக்குநர் மகேந்திரன் சமீபத்தில் ஒரு பேட்டியில் குறிப்பிட்டார். இது பற்றி உங்கள் கருத்து என்ன?

விஜய் மில்டன்: மகேந்திரன் சொல்வது நூறு சதவீதம் உண்மை. அதுதான் மக்களுக்குப் பிடிக்கிறது என்று இயக்குநர்கள் சுலபமாகத் தப்பித்துக் கொள்கிறார்கள். நான் நிச்சயம் அவர்களில் ஒருவன் இல்லை. அதற்கு எனது அடுத்தப் படமே சாட்சியாக இருக்கும்.

சந்திப்பு: சிவதானு


ELECTRICAL WORKS

FRIDGE, WASHER, DRYER போன்ற மின் உபகரண திருத்த வேலைகள் செய்து கொடுக்கப்படும். நியாயமான கட்டணம். தரமான சேவை.
வாடிக்கையாளர்களின் நன்மதிப்பீடு.

தொடர்புகளிற்கு: 416-286-2880





மகிழ்ச்சிகரமான குடும்ப
வாழ்க்கை தரமான குழந்தை
வளர்ப்பு உள்ளடங்கிய
வாழ்வியல் ஆலோசனைகள்

KG Master
வாழ்வியல் ஆலோசகர்
Office: 416.291.2611
Mobile: 416.725.5112

NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU




Tel: 416-750-1976 Web:www.niru.com e-mail: info@niru.com

NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU NIRU

# நோய் நீக்கும் வர்மப்புள்ளி வைத்தியம்

அடி வயிற்றிலுள்ள உள் உறுப்புக்கள் பலப்படவும், பெண்களின் கற்பப்பை பலப்படவும். (To Strengthen the Pelvic organs and Uterus)

ஓரிடத்தில் தரையில், விரிப்பில் கால்களை நன்கு மடித்து நிமிர்ந்து இருக்கவும். வாயை மூடி மூக்கால் மூச்சை உள் இழுக்கவும். இரண்டு கைகளையும் முன்புறம் நீட்டி இரண்டு கால் பெருவிரல்களையும் கெட்டியாகப் பிடிக்கவும். இரண்டு முழங்கைகளும் இரண்டு மடித்த முழங்கால்களையும் வெளிப்பறம் தள்ளியபடியே தலையையும், மேற்பாகத்து உடம்பையும் முன்

பக்கம் வளைக்கவும். இப்படி வளையும் பொழுது மூக்கால் மூச்சை மெதுவாக வெளிவிடவும். இப்படிக்குனிந்து மூக்கால் கால் பெருவிரலைத்தொட முயற்சிக்கவும். ஆரம்பத்தில் சற்று கடினமாக இருக்கும், ஆரம்பத்தில் இயலுமானவரை முன்பக்கம் வளைந்தால் போதும். நாளடைவில் குனிந்து கால்பெருவிரல்களை தொட்டுவிடலாம். இப்படி இருந்தபடி மூக்கால் மூச்சை நன்கு இழுத்து விடவும். இப்படி 15 அல்லது 21 எண்ணும் வரை இருந்து அதன்பின் நிமிர்ந்திருந்து வழமைபோல் சுவாசிக்கவும். இப்படி ஆறு அல்லது ஒன்பது முறை காலை, மாலை செய்யவும். இதனால் அடிவயிற்றினுள் உள்ள உறுப்புக்கள் பலப்படும். கற்ப பை பலப்பட்டு அது சம்மந்தமான நோய்கள் நீங்கும். உள்மூலம், வெளி மூலம், சலப்பை, விந்து ஸ்கலிதம் போன்ற நோய்கள் குணமாகும்.

மனத்தை அமைதிப்படுத்த (To Calm the Mind)

ஓரிடத்தில் குந்தி இருந்து மடித்த முழங்கால் இரண்டையும் இருபுறமும் அகட்டி வைக்கவும். இப்போ நீங்கள் கால் விரல்களில் இருப்பீர்கள். குதிக்கால் சற்று உயர்ந்து நிற்கும். இப்போ இரண்டு கைகளையும் இரண்டு முழங்கால்களுக்கு மேல் வையுங்கள். வாயை மூடி மூக்கால் மூச்சை நன்கு இழுத்து விடுங்கள். கண்களையும் நன்கு மூடி வைத்துக்கொள்ளவும். இப்படி 30 அல்லது 50 எண்ணும் வரை இருந்தால் மனம் கட்டுப்பாட்டிற்குள் வந்துவிடும். இது ஐம்புலன் அடக்கும் ஆசனமாகும். இதை திம் காலை, மாலை செய்யலாம். மன உழைச்சல், கோபம் வரும்போதும் செய்து மனதை அமைதிப்படுத்தலாம்.

**டாக்டர். சி.வ. பரராஜசிங்கம், Ph.D**
Holistic Practitioner (canada)
Nutrition & fitness (Canada)
**'யோக சித்தர்' வவுனியா, இலங்கை**
Tele. - 416.291.3022

கழுத்து சுழுக்கு குணமாக-(To Relief Neck Stiffness or Sprain)

கைகளை நன்கு நீட்டி இடது கைக்குமேல் வலதுகையை வைத்து இறுகப்பிடிக்கவும். மேல் வைத்த வலதுகை இடது கை சின்னிவரலுக்கு பின்புறம் பிடித்து இருக்கவேண்டும். இப்போ வாயை நன்கு மூடி மூக்கால் மூச்சை நன்கு உள் இழுக்கவும். இப்போ ஒன்றுடன் ஒன்று இறுகப்பிடித்த கைகளை மேலே தூக்கி தலைக்கு இருப்பக்கமும் காதுடன் சேர்த்து இறுகப்பிடிக்கவும். இப்போ வாயை மூடியபடியே மூக்கால் மூச்சை நன்கு இழுத்து விடவும். இப்படி 15 எண்ணும்வரை செய்யவும். இப்போ கைகளை முன்பக்கம் முன்பு இருந்த நிலைக்கு கொண்டுவந்து தளர்த்தி வழமைபோல் மூச்சுவிடவும். இப்போ வலது கையை இடது கைக்குமேல்ப்பக்கம் வைத்து வலது சின்னிவிரலுக்கு பின்புறம் இறுகப்பிடித்தபடியே முன்பு செய்ததுபோல் தலைக்கு இருபக்கமும் இறுகப்பிடித்து மூக்கால் மூச்சை இழுத்துவிடவும். இப்படி 15 முறைசெய்து கைகளைத்தளர்த்தவும். இது கைகள் திருகு ஆசனம். இதனால் கழுத்துவலி கழுத்தில் ஏற்படும் சுழுக்கு, கைகளில் ஏற்படும் விறைப்பு, மதமதப்பு குணமாகும்.

ஒரு விரிப்பில் நிமிர்ந்து படுக்கவும் கால்களை நன்கு நீட்டிக்கொள்ளவும். வாயை மூடி மூக்கால் மூச்சை உள் இழுக்கவும். கால்களை ஒன்றுடன் ஒன்றை இறுகப்பிடித்த படியே கைகளை தலைக்கு இருமருங்கிலும் வைத்தபடியே தலையை யும் நெஞ்சையும் முன்பக்கம் நிமிரவும். கால்கள் இரண்டும் ஒன்றுடன் ஒன்று இறுகப்பிடித்தபடி வளையாது தரையை அழுத்தியபடி இருக்கவேண்டும். இப்போ தலையை பின்பக்கம் வளைத்தபடி இரண்டு கைகளையும் இயலுமானவரை பின்பக்கம் நகர்த்தவும். இப்படி 15 எண்ணும் வரை இருந்து பின் முன்போல் படுத்து இயற்கையாக சுவாசிக்கவும். இப்படி ஆறு முறை செய்தால் கழுத்தில் ஏற்படும் பிரச்சினைகள் குணமாகும்.

ஒரு விரிப்பில் நிமிர்ந்து அமரவும் இரண்டுகால்களையும் 'சப்பாணிகாட்டி' அமரலாம். வாயை மூடி மூக்கால் மூச்சை உள் இழுக்கவும். இரண்டு கைகளையும் முன்பக்கம் நீட்டி இரண்டு கால் பெருவிரல்களையும் இறுகப்பிடிக்கவும். இரண்டு முழங்கைகளாலும் இரண்டு முழங் கால்களையும் வெளியே தள்ளியபடி முன்பக்கம் குனிந்து மூக்கால் ஒன்றுடன் ஒன்று இணைந்திருக்கும் கால் பெருவிரல்களை தொட முயற்சிக்கவும். இப்போ இரண்டு கைகளையும் உயர்த்தி பிடரிக்கு பின் உள்ள கழுத்தை இரண்டுகைகளாலும் பொத்திப்பிடித்து 15 எண்ணும்வரை மூக்கால் மூச்சை உள் இழுத்து வெளியே விட்டவண்ணம் இருக்கவும். வாய் நன்கு மூடி இருக்க வேண்டும். இப்போ நிமிர்ந்து இருந்து வழமைபோல் சுவாசித்து மீண்டும் முன்போல் முன்பக்கம் வளைந்து இந்த அப்பியாசத்தை செய்யவும். இந்த அப்பியாசத்தை காலை, மாலை ஆறுமுறை செய்யவும். கழுத்தில் ஏற்படும் சகல அசௌகரியங்களும் குணமாகும்

கால்களில் ஏற்படும் நோய்கள் குணமாக-(To cure Ailments of the Legs)

ஒரு விரிப்பில் நிமிர்ந்து படுக்கவும். இரண்டு கால்களையும் நீட்டி வைத்திருக்கவும். வாயை நன்கு மூடி மூக்கால் மூச்சை உள் இழுத்து வெளியே விடவும். இப்போ வலதுகாலை மடிக்காது நேரே மேலுக்கு தூக்கவும். இரண்டு கைகளையும் முன்பக்கம் நீட்டி முழங்காலின் பின்புறத்தை இறுகப்பிடித்துக்கொள்ளவும். இப்போ மூக்கால் மூச்சை இழுத்து விடலாம். இப்படி 21 எண்ணும்வரை பிடித்திருக்கவும். இப்போ வலது காலை இறக்கி கீழே விட்டுவிட்டு, இடது காலை நேரே மேலுக்கு தூக்கி கைகளால் முழங்காலுக்கு பின்புறம் படித்துக்கொண்டு இயற்கையாக சுவாசிக்கவும். இப்படி 21 எண்ணும்வரை இருந்து பின் காலை இறக்கவும். இந்த அப்பியாசத்தை ஆறு அல்லது ஒன்பது முறை காலை, மாலை செய்யவும். இதனால் காலில் ஏற்படும் நோய்கள், கெண்டைபிரட்டல், (Cramps)கால் விறைப்பு, மதமதப்பு,கால்களில் நாழப்புடைப்பு(Vericose Veins) ஆகியவை குணமாகும். 'மருதன்' ஓட்டம் போன்ற பயிற்சிக-ளில் ஈடுபடும் நபருக்கு ஓடும் பொழுது தசை இறுக்கம் ஏற்படுதல் தடுக்கப்படும்.

ஓரிடத்தில் இருந்தபடி ஒருகாலை இருகைகளாலும் தூக்கி நெஞ்சுக்கு நேரே கொண்டு வரவும், அதன்பின் கணுக்கால் மொழி மூட்டை முன்ப்பம், பின்பக்கம் வழைத்து பாதத்தையும் நன்கு திருகவும். இப்படி 15 எண்ணிக்கை செய்து அக்காலை விட்டு விட்டு மறுகாலையும் அப்படியே தூக்கி அழுத்தி திருகவும். இதனால் கால், பாதங்களில் ஏற்படும் நோய்கள் குணமாகும். பாதங்களுக்கு அதிக இரத்த போரீப்பு ஏற்பட்டு கால், பாதஙிகளில் எதுவித நோயும் வராது. இந்த அப்பியாசங்கள் எல்லாவற்றையும், எல்லோரும் செய்யவேண்டிய அவசியமில்லை. மூன்று அப்பியாசங்களை தினம் செய்யலாம். காலையிலும் மாலையிலும் பத்து அல்லது 15 நிமிடங்கள் செய்தால் போதுமானது. ஏனைய அப்பியாசங்களை தேவைப்படும் போது செய்து உடம்பில் ஏற்பட்ட நோய்களை விரைவில் நீக்கிக்கொள்ளலாம்.




**MOHAN HOMEOPATHIC CLINIC & MASSAGE CLINIC**

mhc

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் **டாக்டர் ஜே. மோகன்**



Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM / NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

| | | | |
|---|---|---|---|
| Cough | Tonsillitis | Migraines | Prostatitis |
| Flu | Gout | Hair Loss | Obesity |
| Depression | Arthritis | Diabetes | Hemorrhoids |
| Anxiety | P.M.S | Cystitis | Stumatitis |
| Asthma | Leucorrhea | Cancer | Colitis |

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

**TEL: 416-298-7537 / 416-291-3022**

5200 Finch Ave, East Suite 210
(At Middle Field), Scarborough, M1S 4Z4



SHAWN TRUCK & FORKLIFT
DRIVING SCHOOL







**Fork Lift licence**
From **$75.00**

**Truck licence A-Z**
From **$599.00**

**In Classes**
**365 (Learning Permit)**
**Dangerous Goods**
**Border Crossing**
**Air Brake (Z)**
**Log book**

- A-Z & D-Z up grade • One on One Training
- Job Placement Right Away!
- உடனடி வேலை வாய்ப்புக்கள்
- வாரத்தில் ஏழு நாட்களும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் பயிற்சிகள் வழங்கப்படும்.

**Air brake**

Excellent Quality - Low Cost Training

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:

Pl. Call: Raja / Shan

416.412.7618 / 416.913.9574
416.829.0603

40 NUGGET AVE., #8, Scarborough East (McCowan & Sheppard)

நகைச்சுவைத் தொடர் 148

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்

நினைத்தது ஒன்று நடந்தது ஒன்று  நடந்தது ஒன்று
அதனாலே முழிக்குதே. . . . . .

நினைத்ததெல்லாம் நடந்துவிட்டால் தெய்வம் வேறேது
நித்தம் நித்தம் மாறுகின்றதெத்தனையோ
நெஞ்சில் நினைப்பதிலே நடப்பதுதானெத்தனையோ
என பல சினிமாப்பாடல்களும். . . . . .

எது நடந்ததோ அது நன்றாகவே நடந்தது
எது நடக்கிறதோ அது நன்றா நடக்கிறது
எது நடக்கஇருக்கிறதோ அது நன்றாகவே நடக்கும்
உன்னுடையது எதை இழந்தாய் எதற்காக நீ அழுகிறாய்
- கீதாசாரம்

தத்துவங்.களும் மனதில் ஒன்றையொன்று மிஞ்சி சவாரீட்டுக்கொண்டிருந்தன. . . . . உலகருக்கு புதிதாக எதுவும் படிக்க மனம் எழவில்லை ஆரம்பத்தில் படித்ததை நினைவில் கொண்டாலே மனிதன் இன்னும் எத்தனையோ வருடம் உயிர் வாழவேண்டியிருக்கும் ஆனால் மனிதன் உற்ற போரில் கற்றது மற என்பது போல தேவையானபோது படித்ததை மறந்துவிடுகிறான்

உலகர் படிக்கும் காலத்தில் பரீட்சை எழுதும்பொழுது ஞாபகம் வராத பல பதில்கள் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியேவந்து தாம்எழுதிய பதில்கள் பற்றி (படித்த) நண்பர்கள் கதைக்கும்போது தான் ஞாபகம் வரும்.

ஆட்டிலறி அன்னம்மாவும் செக்கன்ட்புளோர் செல்லம்மாவும் தமிழகத் தேர்தலில் ஜேயலலிதாதான் பதவிக்குவருவார் இல்லை கலைஞர்கருணாநிதிதான் வருவார் என நடந்த வாகடகுவாதம் சதாம்குசைனின் வழக்கு வாக்குவாதத்தைவிட சுவாரஸ்யமாக இருந்தது முடிவாக தேர்தல் முடிவு உலகர் இருவரையும் பார்த்து சிரிக்கத்தான் செய்தது.

அன்றாட காலநிலையைகருவிகள் மூலம் அறியக்கூடியதாக இருக்கிறது. ஆனால் உலக அரசியல் சுனாமி போன்றது தொடங்கிய வேகத்தைவிட முடியும்போது வேகம் கணக்கிடமுடியாது. ஆதுபோலத்தான் தமிழகத்தேர்தல் முடிவுகளும்.

சித்திரா பௌர்ணமி பெற்றுவளர்த்து சாந்தியடைந்த கடவுளுக்கு உலகர் முருகேசா ஆட்டிலறி அன்னம்மா ராசம்மாக்கா ரூபன் ரூபி பட்டாளமே வர்த்தகச் சோலையில் அத்தனை சனத்திரளிலும் பல நன்பர்களை அங்கு வீடியோக்கடைகள் உடுப்புக்கடைகள் மற்றும் வர்த்தக ஸ்தாபனங்களின்  ஸ்பீக்கர் சத்தத்தையும் மிஞ்சி கதைத்து பலவருடம் சந்திக்காத பல நண்பர்களையும் கண்டு தங்கள் சினேகிதத்தை புதிப்பித்துக்கொண்டனர் இனி அடுத்த சந்திப்பு எந்தக்கோயில் திருவிழாவிலோ அல்லது யார் வீட்டுத்திருமணத்திலோ.
முதல்நாள் வத்தகச்சோலையில் அன்பு அறிவிப்பாளர் அப்துல் ஹமீத்தின் வெல்லமுடிந்தால் வெல்லுங்கள் சுவராஸ்யமான நிகழ்ச்சியும் இசைக்குயில் எஸ். ஜானகியின் இசைமழை கனடிய இசைக்கலைஞர்களுடன் பொழிந்தபொழுது பழைய இராணுவ விமானதளம் அதிருமளவிறுகு மக்கள் கரகோசம் செய்தனர்.


## தமிழர் நிர்வாகத்தில் ஒரு
# EMBASSY

• வீட்டிற்குத் தேவையான தரமான உணவுப் பொருட்கள், (Groceries)
• இலங்கை / இந்திய இனிப்புப் படையல் (Sweets)
• இலங்கை / இந்திய உணவகம் (Restaurant)



416-332-8451
Finch / Middlefield
5200 Finch Ave., Scarborough

சமோசாவிற்கு அழையுங்கள்
416-332-0944





சுயாதீன கலை திரைப்பட மையம் - ரொரன்ரோ - கனடா

## ஐந்தாவது தமிழ் குறும்பட, விவரணத் திரைப்பட விழா - ஆவணி 2006

- படைப்புக்கள் கிடைக்க வேண்டிய கடைசி நாள் யூலை 10 ஆம் நாள் (July 10, 2006)
- படைப்புக்கள் 30 நிமிடங்களுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும்.
- படைப்புக்களின் மொழி தமிழாக இருத்தல் வேண்டும்.
- படைப்புக்களுடன் அதில் பங்குபற்றிய தொழில் நுட்ப கலைஞர்கள், நடிகர்கள்  பட்டியல் இணைக்கப்பட வேண்டும்.
- படைப்புக்களின் தயாரிப்பாளரின் கையொப்பத்துடன் கூடிய கடிதம் இணைக்கப்பட வேண்டும்.
- தேர்வுக் குழுவின் முடிவே இறுதியானது.
- படைப்புக்கள் அனுப்ப வேண்டிய முகவரி - Independent Art Film Society of Toronto

4 Castlemore Avenue, Markham, ON , Canada  L6C 2B3
மேலதிக தொடர்புகளுக்கு : 905-887-7457, 416-450-6833, 416-400-6406
rathan@rogers.com, www.iafstamil.com



## வீட்டில் பூச்சி, எலித் தொல்லையா?

வீடுகள், தொடர்மாடி வீடுகள், தொழிற்சாலைகள், வியாபார நிலையங்கள் போன்றவற்றில் பூச்சி, எலித் தொல்லையா? கவலையை விடுங்கள்.  முற்றாக ஒழிக்க அழையுங்கள்

Kanthan: 416.291.3997







• No Spraying • No Smelling • No Moving






## யோகா சோதிடம்

• கிரகப் பொருத்தம் பார்த்தல்
• சுபமுகூர்த்தம் கணித்தல்
• பலன் பார்த்தல்
• சாதகக் குறிப்புக் கணித்தல்

416-299-8361





# YARL WINDOW
## BLINDS & DRAPERY

BLINDS DRAPERIES AND SHUTTERS
• Venetian Blinds • Pleated Shades
• Vertical Blinds • Cellular Shades
• Roller Shades



FREE ESTIMATE


உங்கள் எண்ணம் போல் வண்ண, வண்ணத் திரைச் சேலைகளுக்கு இன்றே அழையுங்கள்

விபரங்களுக்கு: என். செல்வம் - 905.201.7733
416.806.5397
5210 Finch Ave., E. Unit #3 (Middlefield & Finch) Scarborough, ON



# SAFETY TRUCKS
## Training School Ltd.

Training & Trucking Classes A, D & Z




In Classes
• 365 (Learning Permit)
• Log Books
• Air Brake (Z)
• Dangerous Goods
• Border Crossing
• Defensive Driving Course

- தமிழ் மொழி மூலம் அனைத்துப் பயிற்சிகளும் தனித்தனியாகக் கொடுக்கப்படும்.
- One On One Training
- அனுமதிப்பத்திரத்திற்கு (License) உத்தரவாதம் அளிக்கப்படும். வேலை எடுப்பதற்கும் உதவிகளும் ஆலோசனைகளும் வழங்கப்படும்.
- கனடாவில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது தமிழ் TRUCK DRIVING பயிற்சி இடம். (12 ஆம் ஆண்டு)
- We Accept Welfare & Unemployment Insurance
- வாரத்தில் ஏழு நாட்களும் பயிற்சிகள் வழங்கப்படும்.

19 Years Canadian Experience with Trucks

சிறந்த பயிற்சி பெற அழையுங்கள்:
# YOGAN SOCKALINGAM
Truck Driving போதனாசிரியர்
905-793-9546 / 416-616-5979
4 Wilkinson Road, 2nd floor, Brampton, ON  L6T 4M3

# தவறான முன்னுரிமை

## ஓடும் நீர் உறைவதில்லை 12

மகிழ்ச்சிகரமான குடும்ப வாழ்க்கை என்பது ஒழுங்குபடுத்தப்பட்ட வாழ்வியல் முறை ஒன்றினாலேயே நிர்ணயிக்கப்படுகின்றது. கடவுள், குடும்பம், தொழில் என்ற ஒழுங்கில் முன்னுரிமை கொடுக்கப்படும் குடும்பவாழ்க்கை மகிழ்ச்சிகரமானது மட்டுமன்றி எதிர்காலச் சந்ததியினரை சிறந்த முறையில் நெறிபடுத்தும் அமைப்பாகவும் அமைகின்றது. ஒரு குடும்ப வாழ்க்கையின் ஆரம்பகாலத்தில் இந்த ஒழுங்கு முறையைப் பின்பற்றுவது சிறிது கடினமாக இருப்பினும் காலப்போக்கில் இந்த ஒழுங்கு முறைக்குள் குடும்ப அமைப்பைக் கொண்டுவருவது மிகவும் முக்கியமானதாகும். எவ்வளவு விரைவாக இந்த ஒழுங்குமுறை உருவாக்கப் படுகின்றதோ அவ்வளவு விரைவாக மகிழ்ச்சிகரமான வாழ்க்கை முறைக்குக் குடும்பத்தை இட்டுச் செல்லமுடியும்.

மேலோட்டமாகப் பார்க்கும்போது எல்லாக்குடும்பங்களும் இந்த ஒழுங்கமைப்பை உடையதாகத் தோன்றினும் தனிப்பட்ட முறையில் பார்க்கும்போது பெரும்பாலான குடும்பங்கள் இந்த அமைப்பைக் கொண்டிருப்பதில்லை என்பதைக் காணலாம். அதி பெரும்பான்மையான குடும்பங்கள் கடவுளுக்கு முன்னுரிமை கொடுத்திருப்பினும் அதற்கடுத்ததாகத் தொழிலுக்கு முன்னுரிமை கொடுத்திருப்பதை அவதானிக்கலாம். இந்தக் குடும்பங்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கும் கருத்து முரண்பாடுகளுக்கும் அடிப்படையாக அமைவதே இந்தத் தவறான முன்னுரிமைதான். துரதிஷ்டவசமாக இக் குடும்பங்கள் இதை உணர்வதில்லை.

ஒரு குடும்பத்தின் சுமுகமான வாழ்வியலுக்கு அக்குடும்பத்தின் தொழில் வருமானம் அடிப்படையாகின்றது. அதாவது தொழில் வாழ்வியலின் அடிப்படையாகின்றது. ஆனால் அது கடவுளுக்கும் குடும்பத்துக்கும் அடுத்ததாக அமைய வேண்டும். ஒரு நலமான வளமான குடும்பம் என்பது தொழில் வருமானத்தால் மட்டும் தீர்மானிக்கப்படுவதில்லை. தொழில் என்பது குடும்ப வாழ்வியலில் ஒரு பகுதி மட்டுமே.

நடைமுறையில் குறிப்பாக இந்த நாட்டில் குடிபுகுந்துள்ள நம்மவர்களில் பெரும்பாலானவர்கள் தமது குடும்பத்தின் நலனைவிடத் தொழிலுக்கு அதி முக்கியத்துவம் கொடுத்துவருகின்றனர். இதற்குப் பல காரணங்கள் கூறப்படுகின்றன. கடன்பழு, அதிக செலவு, தவறான முதலீடுகளால் ஏற்பட்ட இழப்புக்கள், ஏமாற்றங்கள் என்பன அவற்றுள் சில. இந்த நாட்டில் குடிபுகுந்து ஒரு சில வருடங்கள் நானும் இந்த நிலைக்குள் அகப்பட்டுத்தான் இருந்தேன். இந்தச் சிக்கல் நிறைந்த வாழ்க்கைக்குக் காரணம் என்ன என்பதைப் பல்வேறு வழிகளில் ஆராய்ந்து பார்த்தேன். ஒவ்வொரு கேள்விக்கும் பதில் கிடைத்தது. ஆனால் அவை ஒரு தீர்வாக அமையவில்லை. ஏனெனில் பிரச்சினைகள் தவறான தெரிவுகளால் உருவாக்கப்பட்டிருந்தன என்பதை நான் உணர்ந்து கொண்டபோதும் அதற்கான தீர்வு கடவுள், குடும்பம், தொழில் என்ற ஒழுங்குபடுத்தப்பட்ட வாழ்வியல் முறையிலேயே தங்கியுள்ளது என்பதை அறியச் சிறிது காலம் எடுத்தது.

ஒரு குடும்பத்தின் பல்வேறு பிரச்சினைகளுக்கான தீர்வுக்கு அதன் பொருளாதாரம் ஒரு முக்கிய காரணியாகும். ஆனால் பொருளாதாரம் தான் முழுக்காரணி அல்ல என்பதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும். தொழில் வருமானம் ஒரு குடும்பத்தின் அடிப்படை விடயங்களைத் தகர்ப்பதாக அமையுமாயின் எந்த நன்மையும் ஏற்படுவதில்லை. தொழிலைத் தெய்வமாக மதிக்க வேண்டும் என்பது அவசியம். ஆனால் கடவுளுக்கும் குடும்பத்துக்கும் முன்னுரிமை அளிக்காது தொழிலுக்கு முன்னுரிமை கொடுக்கும் ஒருவரது தொழில் தெய்வீகத் தன்மை வாய்ந்த தொழிலாக ஒருபோதும் அமைவதில்லை.

எதற்காக ஒருவர் தான் செய்யும் தொழிலுக்கு அதிமுக்கியத்துவம் கொடுக்கின்றார் என்பதை ஆராய்வோமானால் பல காரணிகளை இனங்கண்டு கொள்ளலாம். முதலாவதாக தவறான விசுவாசத்தன்மை. அதாவது ஒரு சிலர் தமது குடும்பத்தின் மீது உள்ள விசுவாசத்தைவிட தனது முதலாளியின் மீது அதிக விசுவாசமுடையவராக இருப்பார். தனது குடும்பத்தில் ஒருவருக்கு உடல்நிலை சரியில்லாததால் தேவைப்படும் உதவியைப் புறக்கணித்து விட்டு முதலாளியின் விசுவாசத்தைச் சம்பாதிக்க உழைப்பார். நிரந்தரமற்ற உறவுக்காக நிரந்தரமான உறவைப் புறக்கணிப்பவர்கள் இவர்கள்.

KG Master
416.725.5112

இன்னும் சிலர் தாம் சுகவீன முற்றிருந்தாலும் கூட அதை நேருக்கு நேராகத் தெரியப்படுத்த வேண்டும் என்பதற்காக வேலைக்குச் சென்று இருமி, இருமிக் கதைப்பார்கள். ஓர் உண்மையான விடயத்தை உறுதியாகச் சொல்வதற்கு உரிய மனப்பக்குவத்தை வளர்க்காதவர்கள் இவர்கள். தொலைபேசிமூலம் சொன்னால் முதலாளி பொய்யென்று நினைத்து விடுவாரோ என்ற மனப்பயம். உண்மைக்குப் பயம் கிடையாது.

வேறுசிலர் தன்னால்தான் தான் வேலை செய்யும் நிறுவனம் இயங்குவதாக நினைத்து எல்லாவற்றையும் தனது தோள்மீது தூக்கி வைத்துக் கூத்தாடுவர். தான் ஒருநாள் வேலைக்குப்போகாவிட்டால் முதலாளி தூக்கில் தொங்கிவிடுவார்போல் நடந்து கொள்வார்கள். இந்த அறியாமையால் தமது குடும்பத்தை முற்றாகப் புறக்கணித்து விடுகிறார்கள். குடும்ப நலனுக்கு முக்கியத்துவம் கொடுக்காத எந்த முயற்சியும் வீணான முயற்சி என்பதை என்றோ ஒருநாள் பலத்த இழப்புக்களால் அறிந்து கொள்வார்கள்.


தாழ்வு மனப்பான்மை காரணமாகத் தமது தேவைகளைப் புறக்கணித்து அடிமைகளாகத் தொழில் செய்பவர்களும் உண்டு. முதலாளி சொல்வதற்கெல்லாம் தலையாட்டுவார்கள். சரி, பிழை, நீதி, நீதியின்மை என்று எதையும் கருத்திற் கொள்ளாமல் எவ்வளவுதான் விருப்பத்துக்கு மாறாக இருப்பினும் அடிமைகள் போல் செய்து முடிப்பார்கள். இந்தவகையான தாழ்வு மனப்பான்மைக்கு மொழித் தேர்ச்சியின்மை, மன உறுதியின்மை, நேர்மையின்மை போன்ற காரணிகள் அடிப்படையாகின்றன.

செய்யும் தொழில் தெய்வம் என்பது குடும்ப நலன்களுக்கு தீங்குவிளைவிக்காத தொழில் தான். அதாவது தொழிலில் உள்ள ஈடுபாடு வருமானம், உளவியல் ரீதியான காரணங்கள், உடல் நலம் என்பன உங்கள் குடும்பநலனை மேம்படுத்துவதாக அமையும் தொழில்தான் தெய்வம்.

வாசகர்களே! குடும்பங்களில் காணப்படும் பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு தொழில் மட்டுமல்ல. தொழிலாக இருந்திருந்தால் கடின உழைப்புக்கு அஞ்சாத நமது இனம் எப்போதோ தன்னிறைவு கண்டிருக்கும். குடும்பநலனுக்கு முன்னுரிமை வழங்கித் தொழிலைச் செய்பவர்களுக்குத் தெய்வ அநுக்கிரகம் கூடத் தவறாமல் கிடைத்திருக்கும். ஆனால் நடைமுறையில் இவற்றைக் காணவில்லையே ஏன்? தவறான முன்னுரிமைதான் ஒரே காரணம். அதாவது குடும்பத்தை விடத் தொழிலுக்கு முன்னுரிமை கொடுப்பதால் தான் அளவு கடந்த பிரச்சினைகளை எதிர்நோக்க வேண்டியுள்ளது என்பது தான் உண்மை.

உழையுங்கள், கடினமாக உழையுங்கள். வேண்டுமானால் இருபத்திநான்கு மணி நேரமும் உழையுங்கள். ஆனால் வாழ்வியல் முறையில் குடும்ப உறவைப் புறக்கணித்து தொழிலுக்கு முன்னுரிமை கொடுக்காதீர்கள். ஏனெனில் தொழில் உங்களுடன் முடிந்து போகும். குடும்ப உறவோ வருங்காலச் சந்ததியினரூடாக வரையறையற்ற காலத்திற்கு தொடர்ந்து செல்லும்.



கல்வி = அறிவுத்திறன் + பண்புடைமை

Education = Intelligence + Character

KG Master
(Over 25 years of experience)
(416) 291-2611
(416) 725-5112

Memory Power, Concentration
Listening Skill, Reading Skill
Goal Setting, Team Work
Performance, Presentation Skill
Time Management

Training Classes for children 7 to 16 years old

Self-Confidence, Self-Image
Self-Discipline, Patience
Obedience, Positive Thinking
Winning Attitude,
Taking Responsibility
Leadership Qualities

JENNY AUTO SALES INC.



(Kennedy & Steeles)

| | | | |
|---|---|---|---|
| 2002 | Honda Civic 4D | 122K | 10,500.00 |
| 2000 | Dodge Caravan | 168K | 4,995.00 |
| 2001 | Toyota Corolla | 70k | 7,995.00 |
| 2000 | Honda Accord Green | - | 9,900.00 |
| 1998 | Toyota Sienna | 170k | 7,900.00 |
| 1995 | Honda Accord EX | - | 4,995.00 |
| 2004 | Toyota Corolla | 50K | 11,500.00 |
| 1997 | Honda Civic 5 Spd. | | 4,995.00 |
| 1998 | GM Savana, Cargo | - | 4,995.00 |
| 2000 | Dodge Caravan | 160K | 5,200.00 |
| 2001 | Honda Civic 2D | 100k | 8,500.00 |
| 2001 | Honda Civic beige 4D | 85K | 8,995.00 |
| 1999 | Honda Civic Silver | 72K | 7,900.00 |
| 2000 | Toyota Corolla | 110k | 8,500.00 |
| 1997 | Dodge Caravan | 145K | 3,995.00 |

இன்னும் பல நல்ல வாகனங்கள் எம்மிடம் உள்ளன. We do vehicle appraisals

Anton: (416) 575-5055 Rajah: (905) 470-0048

Office: 4440 Steeles Ave., East, Markham, ON, L3R 0L4

பராமரிப்பாளர் தேவை/NANNY WANTED

மார்க்கம் பகுதியில் வசிக்கும் தமிழ் குடும்பம் தங்கள் 18 மாதக் குழந்தையை வீட்டில் இருந்து பராமரிக்கக்கூடிய பெண் ஒருவரை தேடுகின்றனர். பிரதான வேலையாக பிள்ளையைக் கவனிப்பது, வீட்டைப்பராமரிப்பது, மற்றும் சமையல் போன்றவற்றைக் கவனிக்கக்கூடியவராக இருத்தல் வேண்டும். இலவசமாக தங்குமிடமும் உணவும் வழங்கப்படும். தெரிவுசெய்யப்படுபவர் இரண்டு Reference தரவேண்டும். தொடர்புகளுக்கு: 416.953.3207



பராமரிப்பாளர் தேவை/NANNY WANTED

Kingston பகுதியில் வசிக்கும் தமிழ் குடும்பம் தங்கள் ஒரு வயதுக் குழந்தையை தங்கள் வீட்டில் இருந்து பராமரிக்கக்கூடிய பெண் ஒருவரை தேடுகின்றனர். பிள்ளையைக் கவனிப்பது, வீட்டைப்பராமரிப்பது, மற்றும் சமையல் போன்றவற்றிற்கு உதவி செய்யக் கூடியவராக இருத்தல் வேண்டும்.

தொடர்புகளுக்கு: 416.238.5656



# சிந்தனை, சொல், செயல்

எனது உள்ளார்ந்த சாரத்துடன் நான் ஒரு நல்ல உறவை ஏற்படுத்தி ஒத்துழைத்தால் தான், எனது லௌகிக வெளிப்புற வாழ்வு வெற்றிகரமாக அமையும் என்பதை இதயபூர்வமாக மனந்திறந்து உணர்ந்து கொள்கிறேன். சொல்வது ஒன்று ஆனால் செய்வது வேறு எனப் பலர் செயற்படுவதை நாம் கண்டிருக்கிறோம். சிலவேளைகளில் நாம்கூட இப்படி நடப்பதுண்டு இல்லையா? ஆம்! நாம் இத்தகைய தவறான முறைகளில் செயற்படுவதை நிச்சயம் தவிர்த்துக்கொள்ள வேண்டும். நான் விரும்புவது, எனக்குக் கிடைக்காது என நீ நம்புவதானால் அது உனக்கு கிடைக்கவே கிடைக்காது என்பதையும் இது உறுதிப்படுத்துகின்றது.

சிந்தனை, சொல், செயல் மூன்றும் ஒத்திருப்பது அத்தியாவசியம் என்பது சத்யசாயி பாபாவின் முக்கிய போதனைகளில் ஒன்று. உனது உள்ளும் புறமும் வெவ்வேறாக இருப்பது பிரபஞ்சத்தையே ஏமாற்றி விடும். பிரபஞ்சத்து நன்மைகளெல்லாம் உனக்கு உதவுவதை உனது இந்தப் போலி முகமூடி தடுத்து விடும். மற்றவர்களின் மனப்பான்மை, செயற்பாடுகளைப்பற்றிப் பேசும் போது, அவற்றில் மாற்றம் ஏற்படுத்த வேண்டும் என அவர்களுக்கு நீ எடுத்துச் சொல்லாவிட்டால் அவர்கள் மாற மாட்டார்கள், இல்லையா? எனது ஆளுமை வளர்ச்சியைப் போஷித்து வளர்ச்சியடையப் போகிறேன் என உதட்டளவில் சொல்லிவிட்டு, ஒன்றுமே செய்யாது காலத்தை விரயப்படுத்தினால் நீ வளர்ச்சியடைவது எப்படி? நான் நிச்சயம் மாற விரும்புகிறேன். அல்லது ஒரு குறிப்பிட்ட இலக்கை அடையப் போகிறேன் என நீ எண்ணும்போது, உனக்கு அந்த அநுபவத்தை அடைய உரிமை இருக்கிறது என்பதை முதல் நீ முற்றும் முழுதாய் நம்பவேண்டும். இத்தகைய தன்னம்பிக்கை இல்லாவிட்டால் நீ வெற்றியடைய மாட்டாய்.'

இவ்வாறு நல்லதும் கெட்டதுமான கலப்பட உணர்வுகளை நீ வெளிப்படுத்துவது உனது உள்முகப்பிரச்சனையே சுட்டிக்



காட்டுகின்றது. "நான் ஒன்றுக்கும் லாயக்கில்லாதவன்", அல்லது "நான் நல்லவன் பெறுமதி வாய்ந்தவன்" என்ற இரண்டிற்கும் இடையேயுள்ள போராட்டத்தையே உனது கலப்பட உணர்வுகள் எடுத்துக் காட்டுகின்றன. நீ உண்மையாக நம்புவதற்கும், நீ நம்புவதாகச் சொல்வதற்கும் இருக்கும் இடைவெளியை உனது மனதைக் கண்காணிப்பதால் நீ உணராலாம். அன்பானவர்களே! இத்தொடரை இவ்வளவு காலமாக வாசித்துவரும் நீங்கள் ஒவ்வொருவரும் இப்போ உங்கள் மனதைக் கண்காணித்துக் கடிவாளம் போடப்பழகியிருப்பீர்கள் என நம்புகிறேன். இல்லையெனில் தயவுசெய்து இன்றே உங்கள் மனதைக் கண்காணிக்க ஆரம்பியுங்கள். அதுதான் ஆளுமை வளர்ச்சியின் அத்திவாரம், என்பதை மறக்காதீர்கள்.


இப்போதிருப்பதைவிட மேம்பட்ட வாழ்வு, உனது உரிமை. அப்படிப்பட்ட சிறந்த வாழ்வைப் பெற நீ பூரண தகுதி வாய்ந்தவன் என நீ விசுவாசத்துடன் நம்ப வேண்டும். சத்யம், தர்மம், சாந்தி, பிரேமை, அஹிம்சை எனும் மனித மேம்பாடுகளுடன் நீ சிறிய வயதுமுதல் வாழ்வது உனது சுயமதிப்பு, தன்னம்பிக்கையை உயர்த்திவிட உன்னையே நீ நேசிப்பாய். ஆமாம்! உனது வெளிப்புற வாழ்வு உனது உட்புற வாழ்வின் பிரதிபலிப்பு தான். வெளிப்புறப் பிரச்சனை உனது உட்புறப் பிரச்சனையைத் தான் எடுத்துக்காட்டுகின்றது. உனது உள்முகப் பிரச்சினைகளையும், பிரபஞ்சத்திற்கு நீ வெளிப்படுத்தும் கலப்பட உணர்வுகளையும் பற்றிய உண்மையை இன்றுவரை நீ சரிவர உணராது இருந்திருக்கலாம். உடனடியாகச் சுயஅலசலை ஆரம்பி! நிச்சயம் உனக்குக் கிடைக்க வேண்டும் என நீ விரும்புவற்றையும், அவை உனக்குக் கட்டாயம் கிடைக்குமா இல்லையா என நீ நம்புவதைப் பற்றியும் மிகக் கவனமாக இன்று பரிசீலனை செய்.

எனது உட்புற வாழ்வில், எனது சாரத்தில் உள்ள பிரச்சினைகளையும், நான் வெளிப்படுத்தும் கலப்பட உணர்வுகள், செய்திகளையும் அலசி ஆராய்ந்து, சரிப்படுத்துவதில் இன்று முதல் விசுவாசத்திடன் ஈடுபடுகிறேன்.

## ஆளுமை (77) வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள்

மேலதிக தகவல்களிற்கு
அழையுங்கள் 905-270-1214

லலிதா புரூடி



தமிழ் மக்களின் நெருங்கிய நண்பர் **ரவி நடராஜா**

தற்பொழுது Franklin Hall LLP Barristers & Solicitors ஆகியோர் இணைந்து சேவையாற்றுகிறார்கள்.

• வாகன விபத்துக்குள்ளாகியவரின் இழப்பீடு பற்றிய தகுந்த ஆலோசனைகள் வழங்கப்படும், உரிய இழப்பீடுகள், மற்றைய இழப்பீடுகள், விபத்துக்குள்ளாகியவரின் சம்பள இழப்பீடுகள் மற்றும் வாகன விதி முறைகளை மீறிய குற்றங்கள் Accident & Traffic Ticket

(17 Years Insurance Claims Experience)

416.245.6555 - 2095 Weston Road, Suite 203, Toronto, ON
416.755.2801 - 2390 Eglinton Ave., E. Suite 223, Scarborough, ON
905.455.8591 - 83 Kennedy Rd. South, #1818, Brampton ON





# பாதைகள், பயணங்கள், பயனுள்ள பாடங்கள்

இம் 'மௌடத்தின்' கீழ் வருபவை ஆலோசனைக்கே அன்றி அறிவுரைகள் அல்ல. உங்களின் பொன்னான சிந்தனைகளுக்கே இவை அர்ப்பணம்.

இன்றைய காலகட்டத்தில் வீதிப் போக்குவரத்து வாகனங்களின் விபத்துக்களைத் தவிர்ப்பதற்கும், விபத்துகளால் ஏற்படக்கூடிய இழப்புக்களைத் தவிர்ப்பதற்கான பல நவீன பாதுகாப்பு முறைகளும், சட்டதிட்டங்களும் கனடா அரசுகளால் (மாகாண, மத்திய) அறிமுகப் படுத்தப்பட்டுள்ளன. ஆயினும் நாளாந்தம் பல விபத்துக்களும், பலவகை இழப்புக்களும் நிகழந்து கொண்டே இருக்கின்றன. இதற்கெல்லாம் முதல் காரணமாக இருப்பது வாகனம் செலுத்துனர்களின் மனப்பாங்கே ஆகும். 'ஒவ்வொரு வாகன ஓட்டுனரும் தம்மைத்தவிர, மற்றைய வாகன ஓட்டுனர்கள் அனைவரும் தவறாகவே வாகனம் செலுத்துவதாக எண்ணிக் கொள்கின்றனர். ஒவ்வொரு ஓட்டுனர்களும் தாம் நூற்றுக்கு நூறுவீதம் வாகனம் செலுத்தும் சட்டதிட்டங்களுக்கு அமைவாக வாகனங்களைச் செலுத்துவதாகவும் கூறிக்கொள்கின்றனர். ஆனால் அதில் உண்மையில்லை. அனைவரும் நூற்றுக்குநூறு வீதம் சட்டதிட்டங்களை மதித்து வாகனங்களை செலுத்தும் போது எப்படி விபத்துக்கள் ஏற்படமுடியும்? ஒவ்வொருவரும் விடும் தவறுகளே அவர்களையும் ஏனைய பலரையும் பாதிப்புள்ளாக்குகின்றது.

"சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் வாகனம் ஓட்டுனரோ, அல்லது வாகனத்தில் பயணிப்போர் எவருமோ (குழந்தைகள் உட்பட வாகனத்தில் பயணம் செய்யும் பொழுது இருக்கைப்பட்டி (Seatbelt Safety) அணிந்து பயணிக்கவேண்டும் என்ற நிலை எவருக்கும் இருந்ததில்லை" என்று கூறுகின்றார் டக்(F)வுலுவிங் (Doug Flewelling - President of the Canadian Automobile Association. ஆனால் இன்றோ சகல வாகனங்களிலும் இருக்கைப் பட்டி பொருத்தப் பட்டிருப்பதுடன் அதனை அணிந்து கொள்வது சட்டரீதியானதும், பாதுகாப்பானதும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. ஆனால் சிலர் இதனை அணியத்தவறுவதனால் விபத்துக்கள் நேரிடும் போது பாரதூரமான இழப்புக்களுக்கு ஆளாக நேரிடுகின்றது.

தற்பொழுது ஐந்து இறாத்தல்



எடையுள்ள குழந்தையிலிருந்து எண்பது இறாத்தல் எடையுள்ள குழந்தைவரை (Infant/ Toddle/Booster) வாகனங்களில் (Car) பிரயாணம் செய்யும்பொழுது குழந்தைகளுக்கான இருக்கைகள் (Child seat) பயன்படுத்தப்பட வேண்டும் என்ற சட்டம் உண்டு. இது பிரயாணத்தின்போது பிள்ளைகள் பாதுகாப்பாக பயணிக்க உதவும். ஆனால் சிலபெற்றோர் இத்தகைய இருக்கைகளைப் பயன்படுத்தாது 'கார்களில் பிள்ளைகளுடன் பயணிக்கும்போது விபத்து ஏற்படுமிடத்து பாரதூரமான இழப்புக் களை எதிர்நோக்குகின்றனர். ஆகவே எண்பது இறாத்தல் அல்லது முப்பத்தியாறு கிலோ கிராம் எடைக்குட்பட்ட பிள்ளைகளுடன் காரில் பயணம் செய்யும்போது (Child Seat) பிள்ளைகளுக்கான இருக்கைகளைப் பயன்படுத்த வேண்டும்.

கடந்த பதினைந்து ஆண்டுகளுக்கு முன்இருந்த நிலையினை விட கனடா வீதிகளில் போக்குவரத்துச் செய்யும் வாகனங்களின் தொகை பல்கிப் பெருகிவிட்டது. வாகனங்கள் பெருகிய அளவுக்கு வீதிகளின் அமைப்புகளில் பெருமளவு மாற்றங்கள் ஏற்படவில்லை. ஆகவே பெருகிவிட்ட வாகனங்களுக்கு ஏற்ப வீதிகளில் போதிய இடம் இருப்பதாகத் தெரியவில்லை. ஆகவே வாகன ஓட்டுனர்கள் இவ்விடயத்தையும் கவனத்தில் எடுத்துக்கொண்டு வாகனங்களை மிக அவதானமாகச் செலுத்துவதன் மூலம் விபத்துக்களைத் தவிர்க்கமுடியும்.

## எஸ். சந்திரபோஸ்

வாகனம் செலுத்தும்போது வாகன ஓட்டுனருக்கு ஏற்படும் கவனக்கலைப்பான்கள் பற்றி ஆராயந்த சர்வதேச கருத்தரங்கில் (The International Confer of Distracted Driving) 'யூரர்' பல்கலைக்கழக உளவியல் பேராசிரியர் டாக்டர் டேவிட் ஸ்ரேயர் (Dr. David Strayer psychology Professor at the University of UTAH) மது அருந்தியபின்னர் வாகனம் செலுத்துபவர்களை விட, செல்போனில் (Cellphone) உரையாடிக்கொண்டு வாகனம் செலுத்துவோருக்கு ஏற்படும் கவனகலைப்பினால் நான்கு மடங்கு அதிகமான விபத்துக்கள் ஏற்பட்டிருப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிப்பதாகக் குறிப்பிட்டுள்ளார். ஆகவே வாகனங்களைச் செலுத்தும் போது 'செல்போன்' பாவனையை தவிர்ப்பதன் மூலம் வாகன ஓட்டுனர்கள் விபத்துக்களைத் தவிர்த்து தங்களையும், ஏனையவர்களையும் காப்பாற்றமுடியும்.

'செல்போன்' உரையாடல் போன்று, வேறுசில கவனக்கலைப்புகளுக்கும் வாகன ஓட்டுனர்கள் உட்படுகின்றனர்.

1. வாகனத்தைச் செலுத்தும்போது வீதியில் நிகழும் வேறு நிகழ்ச்சிகள், மக்கள் மீது ஏற்படும் கவஈர்ப்பு.

2. வாகனத்தைச் செலுத்திக் கொண்டிருக்கும் போது அதே வாகனத்தில் பயணிக்கும் மனைவியிடம் ஏற்படும் வாக்குவாதம், அல்லது பிள்ளைகளின் குறும்புகள் அழுகைகள்.

3. வாகனத்தைச் செலுத்திக்கொண்டிருக்கும் போது சடுதியாக வாகனங்களுக்கு குறுக்கே பறந்துவரும் பறவைகள், வண்டினங்கள் அல்லது ஓடும் சிறு பிராணிகள்.

4. உணவை அல்லது பானங்களை அருந்திய வண்ணம் அவற்றின் சுவையில் லயித்துக்கொண்டு வாகனம் செலுத்துதல்.

5. வாகனத்தில் பொருத்தியுள்ள ரேடியோ அல்லது சி.டி (Radio CD) போன்றவற்றை இயங்க வைப்பதில் கவனத்தைச் செலுத்துதல்.

இவைபோன்ற கவனங்கலைப்பான் களுக்கு ஆட்படாமல் வாகன ஓட்டுனர்கள் வாகனம் செலுத்துவதிலேயே முழுக்கவனத்தையும் செலுத்துவார்களேயானால் வாகன விபத்துக்களையும் அதனால் ஏற்படும் இழப்புக்களையும் பெருமளவு தவிர்க்க முடியும் என நோத் கரோலினா பல்கலைக்கழகத்தினது நெடுஞ்சாலைகளில் பாதுகாப்புப்பற்றிய ஆராய்ச்சி மையத்தின் பேராசிரியர் டாக்டர் ஜென்ஸ்ரியூஸ் குறிப்பிடுகின்றார். (Dr. Jane stutto of the Highway Sefety Research Center at the University of North Carolina)

ஆகவே வாகன ஓட்டுனர்களே பாதைகளில் பயணங்கள் செய்யும் நீங்கள் இப்பயனுள்ள பாடங்களை உங்கள் கருத்தில் கொள்ளுங்கள்.




# உண்மையான ரியான்

நான் லிகுவிட் லவுஞ் கிளப்பில் இருந்து வெளியே வந்தபோது அதிகாலை மூன்றுமணி. வீதியில் ஒரு சிலரின் நடமாட்டமே இருந்தது.. வீடற்றவர்கள் நிறை வண்டிகளைத் தள்ளினர் சனங்கள் நெருக்கியடிக்கும், புகை சூழ்ந்த பார்களில் வேலைசெய்பவர்களும், சங்கீதக்காரர் களும் தங்கள் அன்றைய கடுமையான உழைப்பை முடித்துவிட்டு வீட்டுக்கு திரும்பிக் கொண்டிருந்தனர். போதை நிறைந்த இன்னும் சிலர் வேறு எங்காவது சாப்பிடவோ, அல்ல மேலும் குடிக்கவோ அலைந்தனர்.

அந்த நேரம் கெட்ட நேரத்தில் வாடகைக்கு வாகனமொன்று பிடிப்பது அவ்வளவு கடினமான காரியமாக இருக்கும் என்று நான் நினைக்கவில்லை. காலையிலோ அல்லது பரபரப்பான மாலையிலோ அல்லது வெள்ளி, சனி பின்னிரவுகளிலோ அது அத்தனை சுலபம் இல்லை. அதுவும் ஒரு கறுப்பு முகத்தை வாடகைக் காரோட்டிகள் திரும்பியும் பார்க்கமாட்டார்கள்.

இரண்டு வாடகைக் கார்கள் வசதியாக கிளப்புக்கு முன் தரித்து நின்றன. நான் என்னுடைய இரண்டு ஜிம்பே மேளங்களையும், பேசும் மேளத்தையும், அதன் உறைகளையும் சுமந்தபடி முதல் காரை அணுகினேன். அந்தக் காரின் சாரதி இரண்டாவது கார் சாரதியுடன் ஏதோ வேசமாக பேசுவதை நிறுத்திவிட்டு கையைக் காட்டி “ஓ, நண்பரே வாரும், வாரும்'' என்றான். அவனுடைய பேச்சில் கிழக்கு மத்திய-தரை வாடை வீசியது. கிரேக்கம், அல்பேனியா அல்லது துருக்கியாகக்கூட இருக்கலாம். யார் கண்டது? அவன் கொஞ்சம் தொக்கையாக, ஐம்பது வயது வாக்கில் இருந்தான்.

இத்தனை வருடங்களில் என்னைச் சவாரி ஏற்கும் சாரதிகளினுடனான என் உறவை வர்ணிப்பதானால் சண்டை - சமாதானம் என்று சொல்லலாம். சில வேளைகளில் அது மோசமான பகையாகவும் மாறுவதுண்டு. இந்த டிரைவர்கள், வீதி வெறிச்சோடி, அவர்கள் தொழில் மந்த நிலையில் இருக்கும் நேரங்களில் மட்டுமே என்னை ஏற்றுவார்கள். அவர்களுடன் சுமுகமாக இருக்கவேண்டும் என்ற கட்டாயம் எனக்கில்லை. இன்றைய சாரதி கொஞ்சம் நல்லவன்போல தோன்றினாலும் என்னுடைய வழமையான தோரணையை உதறிவிடுவது கடினமாகவே இருந்தது.

நான் சாமான்களைத் தூக்கிக்கொண்டு காரின் ட்ரங்கை அணுகியதும் அவன் எனக்கு உதவ வந்தான். “நான் இதைப் பார்த்துக்கொள்கிறேன். நீங்கள் சிறிய பையுடன் உள்ளே ஏறுங்கள்'' என்றான். அப்படியே என் ஜிம்பே மேளங்களை வாங்கி ட்ரங்கிலே வைத்து மூடினான்.

“புரூக்லினுக்கா போகிறீர்கள்?'' அவன் கேட்டான். பின் கதவை நோக்கி நடந்தவாறு “ம், பார்க் ஸ்லோப்'' என்றேன்.

